283

தஞ்சை நாயக்கர்கள்

(வரலாற்றுச் சுருக்கம்)

T. S. சிவராமகிருஷ்ணன், பீ. ஏ.

*

V2119 3N'H32
N49
55955

...ள பப்ளிகேஷன்ஸ்,
சென்னை

தஞ்சை நாயக்கர்கள்

(வரலாற்றுச் சுருக்கம்)

T. S. சிவராமகிருஷ்ணன், பி. ஏ,
இயற்றியது

சென்னை சர்வகலாசாலை
சரித்திரப் பேராசிரியராக இருந்த
ஸ்ரீ K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள்
பாராட்டு பெற்றது

ஜெயமங்கள பப்ளிகேஷனஸ
29, ஹாரிங்டன் ரோட், சேத்துபட்டு, சென்னை.

1949

முதற்பதிப்பு : டிசம்பர் - 1949

உரிமைப்பதிவு

விலை அணா 0—14—0

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர், சென்னை - 4

பாராட்டுக் கடிதம்

நீலே, பவர். எட்வர்ட் எலியட் ரோட்
சென்னை-4: 14 டிசம்பர் 1949

ஐயா,

தாங்கள் சில நாட்களுக்கு முன் அன்புடன் கொண்டுவந்து கொடுத்த தஞ்சை நாயக்கர்கள் என்னும் புத்தகத்தைப் பல இடங்களில் படித்துப் பார்த்தேன். பழைய சரித்திர விஷயங்களை மாணவர்களுக்குப் பயன்படும் விதம் திருப்பிக் கூறவேண்டுமென்ற தங்கள் நோக்கம் செவ்வனே நிறைவேறியிருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன், இன்னும் இதுபோன்ற பல எளிய இனிய நூல்களை தாங்கள் இயற்று வீர்களென்றும், அவைகளைத் தமிழ் நாட்டு மாணவரும் பிறரும் வாங்கிப் படித்து தங்கள் சரித்திர ஞானத்தை வளர்த்துக்கொள்வார்களென்றும் நான் நம்புகிறேன்,

இப்படிக்கு
(ஒப்பம்) K. A. நீலகண்ட சாஸ்திரி,
ரிடயர்ட் சரித்திரப் பேராசிரியர்
சென்னை சர்வகலாசாலை

எனது கலாசாலைப் படிப்புக்கு
அடிப்படையாக இருந்து உதவிய
என் அன்புமிக்க அன்னைக்கு
சமர்ப்பணம்

முன்னுரை

சுதந்தர நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரும் தம் நாட்டுச் சரித்திரத்தை நன்கு அறிந்திருத்தல் மிக அவசியம். மக்கள் முறையாக ஜனநாயகத்துக்குப் பயிற்றப்பட வேண்டும் என்று நம் தேசியத் தலைவர்கள் வற்புறுத்தி வருகின்றனர். அந்தப் பயிற்சியில் நாட்டின் பண்டைச் சரித்திர அறிவு முக்கியமான இடத்தைப் பெறும்.

ஆங்கிலேயரது ஆட்சி நிலைக்கும் முன், இந்நாட்டில் மத்திய அரசாங்கத்தின் வலு குன்றி, ஆங்காங்குள்ள மன்னர்கள் தம் இஷ்டம்போல் ஒருவரோடொருவர் சண்டையடித்துக்கொண்டு வெளிநாட்டவனைத் துணைக்கு அழைப்பதும், உதவ வந்தவன் இருந்தவனையும் சேர்த்து விழுங்கிவிட்டு, இடத்தைப் பறித்துக் கொள்வதும் சாமானிய நிகழ்ச்சிகளாக இருந்திருக்கின்றன. தஞ்சையில் ஆட்சி செலுத்திய நாயக்கர்கள், மதுரையில் ஆட்சி செலுத்திய நாயக்கர்கள், தஞ்சையைப் பின்னர் ஆண்ட மகாராஷ்டிரர்கள், இவர்களது சரித்திரத்தைப் படிக்கும்

ஒவ்வொருவருடைய மனத்திலும், இந்திய நாட்டிற்கு ஒரு வலுவுள்ள மத்திய அரசாங்கம் இன்று மிக மிகத் தேவை என்பதை நன்கு உணரக்கூடும்.

மேலும், இந்திய சுதந்தரத்துக்குப் பின், உதவிப் பிரதமர் சர்தார் வல்லபாய் படேல், தம் முதிர்ந்த வயதில் 500-க்கு மேலாக இருந்த சமஸ்தானங்களை இணைத்தும் பிணைத்தும் இந்திய யூனியனுடன் ஐக்கியமுறச் செய்து வரும் அருந் தொண்டின் அருமையும் பெருமையும் நன்கு விளங்கும்.

ஆங்கில ஆட்சிக்கு முற்பட்டவர்களான நாயக்கர்கள், மகாராஷ்டிரர்களது சரித்திரத்தை மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் திருப்பிக் கூற (Re-tell) வேண்டுமென்பதே என் அவா. இதுகாறும் ஆதார பூர்வமாகத் தெரிந்த விஷயங்களையே எளிய தமிழில் எடுத்து எழுதுகிறேன். புதிதாக ஒன்றையும் புகுத்திவிடவில்லை. இந்த முயற்சியில் 'தஞ்சை நாயக்கர்கள்' எனும் இப் புத்தகம் எனது முதல் வெளியீடாகும்.

30-11-49 T. S. சிவராமகிருஷ்ணன்

உள்ளுறை

முன்னுரை

			பக்கம்
1	தஞ்சை நாயக்கர்களின் தோற்றம்	...	1
2	சேவப்ப நாயக்கர்	...	7
3	அச்சுதப்ப நாயக்கர்	...	13
4	இரகுநாத நாயக்கர்	...	23
5	பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதர்	...	35
6	விஜயராகவ நாயக்கர்	...	39
7	செங்கமலதாஸு	...	54
8	நாயக்கர்கள் காலத்து ஆட்சிமுறை	...	58

அநுபந்தம்

கலை, இலக்கியத் துறைகளில் அபிவிருத்தி:

தஞ்சை நாயக்கர்களின் ஆட்சிக்காலம்

—:o:—

சேவப்ப நாயக்கர்

(*1532 — 1580*)

|

அச்சுதப்ப நாயக்கர்

(யுவ. *1560; 1580—1614*)

|

இரகுநாத நாயக்கர்

(யுவ. *1600; 1614 — 1633*)

|

விஜயராகவ நாயக்கர்

(*1633 — 1673*)

|

அளகிரி நாயக்கர் (*1673 — 1674*)

|

செங்கமலதாஸு (*1674 — 1675*)

(யுவ - யுவராஜ்ய பட்டம்)

தஞ்சை நாயக்கர்கள்

—:o:—

1

தஞ்சை நாயக்கர்களின் தோற்றம்

பதினான்காம் நூற்றாண்டின் மூன்றாம் கால் பகுதியில் விஜயநகர மன்னர்களான ராயர்களின் ஆதிக்கம் தென் இந்தியாவில் ஊன்றிநின்றது என்பது நாடெங்கும் சிதறிக் கிடக்கும் கல்வெட்டுகளிலிருந்து தெளிவாகிறது. பாண்டியர்களுக்குள் ஒற்றுமை யின்மை காரணமாக தென்னாட்டிலேயே முதலாவ தான முகமதிய சுல்தான்களின் ஆட்சி மதுரையில் தோன்றி, அதன் கோர உருவத்துடன் 40 ஆண்டுகள் (1330—1371) நடைபெற்றபின், தர்மத்தைப் பாது காக்கவென்றே தோன்றிய விஜயநகர சாம்ராஜ்யத் தின் ஸ்தாபகர்களுள் ஒருவரான முதலாம் புக்கராயரின் குமாரர் கம்பண்ணாவால் ஒழித்துக்கட்டப்பட்டது. தென்னாட்டுப் பகுதி, சாம்ராஜ்யத்தில் ராஜகம்பீர ராஜ்யம் எனத் திகழ்ந்தது. சோழர்களும் பாண்டியர்

களும் தம் பண்டைய பெருஞ் சிறப்பும் வலுவும் மிகக் குன்றி, விஜயநகர சாம்ராஜ்யத்துக்குக் கப்பங்கட்டும் குறுநில மன்னர்களாய் இருந்துவரலாயினர். சமயம் வாய்த்தபோது தங்களுக்குள்ளேயே சண்டையடித்துக் கொள்ளுவதிலும் சளைக்கவில்லை. விஜயநகர ராயர்களோ, தமக்கு வடக்கே இருந்த பாமினி சுல்தான்களுடன் போராடுவதிலேயே பெரும்பாலும் தங்கள் காலத்தைச் செலவிட நேர்ந்ததால், தங்கள் நாட்டத்தைக் குறிப்பாகத் தென்பகுதிகளில் செலுத்தமுடியாமலிருந்தது. இவ்வாறு சில காலம் ராயர்களின் மேலாதிக்கம் தென்பகுதிகளில் நடைபெற்றது.

விஜயநகர மன்னர்களுள் கியாதி வாய்ந்தவரான கிருஷ்ணதேவ ராயர் காலத்திலிருந்து தென் இந்திய சரித்திரத்திலே ஒரு புது யுகம் தோன்றியது எனலாம். பாமினி ராஜ்ய சுல்தான்களுடன் போராடுவதை ஒருவிதமாக வெற்றியுற முடித்துக்கொண்டு, அவர் தம் சாம்ராஜ்யத்தின் தென்பகுதியைச் சீர்படுத்த எண்ணங்கொண்டார். இதற்குள்ளாக, சோழனும் பாண்டியனுமாகக் கலவரத்தைக் கிளப்பிவிட்டனர். சோழ வமிச அரசர்களில் கடைசியவனான வீரசேகரன் என்பான் மதுரையிலிருந்த பாண்டிய அரசனான சந்திரசேகரனுடன் போர் தொடுத்தான். அந்தப் போரில் தோல்வியுற்ற பாண்டியன், மேல் ஆதிக்கம் செலுத்துபவரான விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவ ராயரிடம் (1509-1530) முறையிட்டு அவர் உதவியை நாடினான். அவரும் அதற்கு இணங்கி, நாகம நாயக்கர் எனும் தளபதியின்கீழ் ஒரு பெரும்படையை அனுப்பி

வைத்தார். நாகமர் சோழனை முறியடித்து விரட்டிய துடன் சோழனது நாட்டையும் கைப்பற்றிக்கொண்டார். பின்னர் மன்னருக்கு எதிராக நாகமர் செய்த கிளர்ச்சி மதுரை நாயக்கர்கள் சரித்திரத்தின்பால் படும்.

சோழ, பாண்டிய நாடுகள் இவ்விதமாக விஜயநகர மன்னரின் நேரதிகாரத்தின்கீழ் வந்தன. நாகமர் கிளர்ச்சிக்குப்பின், நாகமரின் குமாரர் விசுவநாத நாயக்கர் 1529-லிருந்து ராயரின் பிரதிநிதியாக மதுரையிலிருந்து ஆட்சி செலுத்தலானர். தஞ்சையும் அவருடைய ஆதிக்கத்தில் இருந்தது. சோழநாட்டின் வேறு சில பகுதிகளும் தொண்டைமண்டலமும் 1512-லிருந்து வீரநரசிங்க நாயக்கர் என்னும் தளபதியின் கிழ் இருந்தன. அவரே அந்தப் பகுதிக்கு ராயரின் பிரதிநிதியாய் மிகுந்த செல்வாக்குடன் ஆண்டுவந்தார்.

வீரநரசிங்கருக்கு, செல்லப்ப நாயக்கர் என்றும் சாளுவ நாயக்கர் என்றும் பெயர்கள் வழங்கின. தற்காலம் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை எனப்படும் பகுதிகளும் இராமநாதபுரம் ஜில்லாவின் ஒரு பகுதியும் அவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. ராயரும் வீரநரசிங்கருக்கு 'உபயப் பிரதானி' என்று விருதுப்பெயர் சூட்டிச் சிறப்பித்தார். இந்தப் பட்டமளிப்பு கிருஷ்ணதேவ ராயருக்கு அடுத்த அச்சுத ராயர் காலத்தில் (1529-ல்) நிகழ்ந்ததாகும்.

அதுவரையில், வீரநரசிங்கர் சந்திரகிரியைத் தம் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தார். நாட்டின் வருமானத்தில் மூன்றிலொரு பகுதியை ராயருக்குக்

காணிக்கையாகச் செலுத்திவிட்டு, மிகுந்ததைக் கொண்டு, 30,000 காலாட்களும், 3000 குதிரை வீரரும் 30 யானைகளும் கொண்ட ஒரு பெரும் உதவிப் படையை அவர் பராமரித்துவந்தார். அவர் காலத்தில் வந்த அந்நிய நாட்டு யாத்திரிகரான நூனிஸ் என்பார், வீரநரசிங்கரே சோழ மண்டலம் முழுவதற்கும் அதிபதி என்றும், அவரது ஆதிக்க எல்லை தென்திசையில் இலங்கைவரை எட்டியது என்றும், அவர் விஜயநகர மன்னரின் மந்திரியாக விளங்கினர் என்றும், அவரது செல்வாக்கு மிகவும் அதிகம் என்றும் தமது பிரயாணக் குறிப்புகளில் எழுதியுள்ளார்.

இவ்வளவு செல்வாக்குள்ள சாளுவ நாயக்கர் கிருஷ்ணதேவ ராயருடைய காலத்திலேயே, மன்னருடைய ஆணைகளை மீறி நடக்கவும், அவர் செய்த ஏற்பாடுகளைத் தட்டிச் செல்லவும் தொடங்கினர் என்பது கல்வெட்டுகளினின்றும் தெளிவாகிறது. மன்னருடைய கட்டளையை மீறித் திருப்பனங்காடு கிராமத்தில் "ஜோடி", "சூலவரி" போன்ற வரிகளை வசூலித்தார் என்றும், கோயில்களுக்கு மன்னர் அளித்த வரிவிலக்குகளை மதியாது வரி வசூலித்தார் என்றும் தெரிகிறது. சின்னக் காஞ்சிவரம் வரதராஜர், ஏகாம்பரநாதர் கோவில்களுக்கு அளிக்கப்பட்ட கொடைகளைச் சமமாகப் பங்கிடாது சிவன்கோயிலுக்குச் சலுகை காட்டினர் என்றும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. அவரது கீழ்ப்படியாமையைக் கண்டிக்க நடவடிக்கை எடுக்குமுன், கிருஷ்ணதேவ ராயர் இறந்தார்; அந்தப் பொறுப்பு அச்சுத ராயர் கைக்கு மாறியது. சாளுவ நாயக்கர் அச்சுத ராயரிடமும் அதே

போக்கில் நடந்துகொள்ளவே, ராயர் வீரநரசிங்கரை 1531-ல் பதவியினின்றும் விலக்கினார். சின்னக் காஞ்சி வரம் கோயில்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஒழுங்கு செய்தார். இது நிகழ்ந்தது 1532-ல். அத்துடன் ஒரு பெரும் பிரச்னை கிளம்பியது; அதன் இறுதி விளைவே தஞ்சையில் நாயக்கர்கள் ஆட்சியின் தோற்றம் ஆகும்.

பதவியை இழந்த தளபதி சாளுவ நாயக்கர் மன்னருக்கு எதிரியாகிக் கலகம் விளைவித்தார். மதுரை விசுவநாத நாயக்கர் தமக்கு உதவி செய்யமாட்டாரென்று அறிந்து, மேலும் தெற்கு நோக்கிச் சென்று, திருவாங்கூர் நாட்டுத் "திருவடி"களான சேர மன்னனுடைய உதவியை நாடிப் பெற்றார். மதுரைப் பகுதியைச் சேர்ந்த பரமக்குடியிலிருந்த தும்பிச்சி நாயக்கர் என்பவரும் யாது காரணத்தாலோ. சாளுவ நாயக்கருடன் சேர்ந்துகொண்டார். இந்தப் பெரும்படை தென்காசியிலிருந்த பாண்டியனைத் தாக்கி அவனை விரட்டியடித்தது. நாடிழந்த பாண்டியன், மன்னரான அச்சுத ராயரிடம் முறையிட்டான். அச்சுத ராயர் பெரும் படையுடனும், தளபதி சலாகம் திருமலை ராயருடனும் சீரங்கம் வந்தடைந்தார். தாம் சீரங்கத்தில் நின்றுகொண்டு, தளபதியைத் தெற்கே அனுப்பினார். சாளுவ நாயக்கர் எதிர்நின்று போர்புரியாது சேரநாட்டுள் ஓடினார். ராயரின்படைகள் சேர மன்னனை உதய மார்த்தாண்டவர்மனை முறியடித்து அவனையும்சாளுவரையும் சிறைபிடித்து, தென்காசிப் பாண்டியனை மீண்டும் பதவியில் அமர்த்தின. பின்னர் தளபதி வெற்றியுடன் ஸ்ரீரங்கம் திரும்பினார்.

இந்தக் குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொண்டு யாரேனும் ஒரு சோழன் தஞ்சைப் பகுதியில் கிளம்பினாலும் கிளம்பக்கூடும் என்று அஞ்சிய அச்சுத ராயர், தம்மிடம் விசுவாசம் உள்ளவராயும் சமர்த்தராயுமுள்ள ஒருவரைத் தஞ்சையில் தம் பிரதிநிதியாக அமர்த்துவது நலம் என்றும், ஏற்கனவே வலு அதிகரித்து விளங்கிய மதுரை விசுவநாதரிடம் தஞ்சையை விட்டுவைப்பது அபாயகரமானது என்றும் எண்ணினார். தஞ்சையே தென் நாட்டில் முக்கியமான பகுதி; சாம்ராஜ்யத்தின் உணவுக் களஞ்சியம்; நடுநாயகமான மத்திய பிரதேசம். எல்லாவற்றையும் கருதி, அச்சுத ராயர் தஞ்சையைத் தனி இராஜதானியாக்கி, அதற்குத் தம் பிரதிநிதியாக, தமக்கு நம்பிக்கையுள்ள தளபதி சேவப்ப நாயக்கரை நியமித்தார். சோழ மண்டலம் விஜயநகர சாம்ராஜ்யத்தில் தனி இராஜதானி ஆயிற்று. இந்த ஏற்பாடுகள் அனைத்தும் 1532-ன் தொடக்கத்தில் அச்சுத ராயர் தெற்கே இருக்கையிலேயே முடிவுற்றன என்று காளஹஸ்திக் கல்வெட்டுகள் சான்று கூறுகின்றன. இதுகாறும் மதுரை நாயக்கரின் கீழிருந்த தஞ்சைப் பகுதி, தஞ்சை நாயக்கரின் கீழ் வந்துசேர்ந்தது.

சோழ மன்னர்களுக்குப் பிறகு தென் நாட்டில் சிறந்து விளங்கிய ஹாய்சால வம்சத்து வல்லாள மகாராஜர்களை நிழல்போலப் பின்தொடர்ந்து ஹிந்து சாம்ராஜ்யத்தை நிறுவியவர்கள் விஜயநகரத்து மன்னர்களே. அவர்களது பிரதிநிதியாய், தஞ்சை ராஜதானியை நாயக்கர்கள் ஆண்டுவரலாயினர்.

2

சேவப்ப நாயக்கர் (1532-1580)

சேவப்பர் தொண்டைமண்டல எல்லையில் ஆட்சி செலுத்திய செல்வாக்குள்ள பிரபுக்கள் வமிசத்தைச் சேர்ந்தவர். நெடுங்குன்றம் அவர்களுடைய பிறப்பிடம் என்பது கல் வெட்டுக்களிலிருந்தும், பின்னர் தஞ்சை நாயக்கர்கள் அந்த ஊருடன் கொண்டிருந்த தொடர்பிலிருந்தும் நிச்சயமாகின்றது. சேவப்பருடைய முன்னோர்கள் விஜயநகர மன்னர்களின் எதிரிகளான பாமினி சுல்தான்களை எதிர்த்துப் போராடுவதில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டவர்கள். சேவப்பருடைய பாட்டனார் கிருஷ்ணதேவ ராயருக்கு மந்திரியாக இருந்தவர்; உதயகிரிக் கோட்டை முற்றுகையில் துணைபுரிந்தவர். சேவப்பருடைய தந்தை திம்மப்ப நாயக்கர்; அவரைத் "திம்ம பூபதி" என்று அழைப்பதும் உண்டு. சேவப்பருடைய தாய் பாக்கியாம்பிகை. தந்தையும் மகனும் கிருஷ்ண தேவராயரிடத்திலும் அச்சுத ராயரிடத்திலும் சேவை செய்தனர். தந்தை, மன்னருடன் ராய்ச்சூர் படையெடுப்பில் போர்புரிந்தவர்; மகனும் 1522-லேயே சேனையில் தளவாய் பதவி வகித்தவர், மேலும் மன்னருடைய நம்பிக்கைக்கு உகந்தவராய், அடப்பம் சின்ன சேவப்பர் என்று பெயர்பெற்றவர். சேவப்பருடைய வீரத்தை மெச்சி, அச்சுத ராயர் தமது மனைவியருள் ஒருவரான திருமலாம்பாவின் இளைய சகோதரி மூர்த்தியாம்பாவை சேவப்பருக்கு மணஞ் செய்வித்தார். இத்தனை உறவு நெருக்கமுள்ள தளபதி சேவப்பரை

அச்சுத ராயர் தஞ்சை இரரஜதானிக்கு நாயக்கர் ஆக்கியது அரசியல் முறைப்படியும் இராஜ்ய தந்திர முறைப்படியும் மெச்சத்தகுந்த நடவடிக்கையாகும். சேவப்பர் எளிய குடும்பத்தில் தோன்றியவரென்றும் கோவிந்த தீட்சிதர்தாம் அவரை ராயருக்கு அறிமுகம் செய்வித்தார் என்றும் கூறும் வரலாறு ஆதாரமற்றது. கோவிந்த தீட்சிதரின் காலத்தைக் கணக்கிட்டுப் பார்த்தாலும், பிழைபடுகிறது; கோவிந்த தீட்சிதரின் காலம் பிந்தியதேயாகும். சேவப்பரின் உயர் குலமும் அவருடைய தளவாய் பதவியும் அக்காலத்திய இலக்கியங்களில் தெளிவாகக் கூறப்படுள்ளன.

தஞ்சை சேவப்பருக்குச் சீதனப் பொருளாக வந்தது என்று கூறும் வரலாறும் ஆதாரமற்றது. தென்னாட்டு நெருக்கடியைக் கருதி, ராயர் சேவப்பரைத் தஞ்சை இராஜதானிக்கு நாயக்கராக்கினூர்; உறவு முறை காரணமாக அவரை மிகுந்த மரியாதையுடன் நடத்தினூர். சேவப்பரும் மன்னர்பால் நம்பிக்கையுடன் நடந்துகொண்டார். பிற்காலத்தில் மதுரை நாயக்கர்களுக்கும் தஞ்சை நாயக்கர்களுக்குமிடையே தோன்றிய பகைமைக்கும் இது பலத்த காரணமாகும்.

சேவப்பரின் ஆட்சியில், குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சிகளோ, போர்களோ நடைபெறவில்லை. அவர் காலத்து மன்னர்களான அச்சுத ராயர், சதாசிவ ராயர், திருமலை ராயர் இவர்களுடைய பெயரும் காலமுமே கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து சாம்ராஜ்ய அதிபதிகளிடம் சேவப்பருக்கு இருந்த மரியாதையும் அடக்கமும் தெளிவாகின்றது. நாடெங்கும் அமைதியும் செழுமையும் ஓங்கி நின்றன

சேவப்பருடைய இராஜ்யம் விஸ்தாரமானதாக இருந்தது. மதுரை விசுவநாத நாயக்கருக்குத் திருச்சிராப்பள்ளியைக் கொடுத்துவிட்டு அதற்கு மாற்ருக, வல்லம் கோட்டையைத் தஞ்சை பெற்றுங் கொண்டது ஒன்றே சேவப்பர் காலத்து முக்கிய நிகழ்ச்சியாகும். இந்த ஏற்பாட்டை அச்சுதராயரே நேரில் செய்துவைத்திருக்கக்கூடும் என்று எண்ண இடம் இருக்கிறது.

மன்னர் சதாசிவ ராயர் காலத்தில், தளபதி ராமராய வித்தலதேவ மகாராயர், திருவாங்கூர் சேரனுக்கு எதிராகவும், பின்னர் குமரிக் கோட்டத்து முத்துச் சலாகத்தைக் சேர்ந்த பரவர்களை எதிர்த்தும் படையெடுத்து வந்து இருவரையும் அடக்கினர். இந்தப் பரவர்கள் கிறிஸ்தவப் பாதிரிகளின் தூண்டுதலின் பேரில் கலகம் விளைவித்தனர் என்றும், பாதிரிமார்கள் பெருங்கொண்ட மதமாற்ற வேலையைத் தொடங்கினர் என்றும், ஹிந்து மதப் புரவலர்களான விஜயநகர ராயர்கள் அவர்களை அடக்கினரென்றும் இதனல் தெரிகிறது. இந்தப் படையெடுப்பின்போது தஞ்சை நாயக்கர் மன்னர் படைக்கு உதவி செய்திருக்க வேண்டும். இப் படையெடுப்பு நிகழ்ந்தது 1545-ல். தளபதி ராமராயரும் மன்னரின் பிரதிநிதியாகப் பத்து வருஷ காலம் திருச்சிராப்பள்ளியில் தங்கியிருந்தார் என்று தெரிகிறது.

வடக்கே சாம்ராஜ்யத்தின் எதிரிகளுடைய வலு அதிகரித்துக்கொண்டே சென்றது. தலைக்கோட்டையில் நிகழ்ந்த கடும் போரில் (1565) விஜயநகர மன்னர் சுல்தான்களிடம் தோல்வியுற்ருர். சாம்ராஜ்யம் தலை

கவிழ்ந்தது. இந்தப் பெரும் போருக்கு மதுரையி லிருந்து அரியநாயக முதலியார் பெரும்படையுடன் சென்றிருந்தார். தஞ்சையிலிருந்து சேவப்பரும் உதவிப் படை ஒன்றை அனுப்பியிருக்கவேண்டும். ஆனால் அக்காலத்திய கல்வெட்டுக்கள் இதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை, தலைக்கோட்டைப் பெரும் போருக்குப் பின்னரே நாயக்கர்கள் சுயேச்சையாக நடந்துகொள்ள இடம் ஏற்பட்டது என்பது தெளி வாகிறது.

சேவப்பர் வெகுகாலம் ஆண்டார். 1560-ல் தமது குமாரர் அச்சுதப்பருக்கு இளவரசுப் பட்டம் சூட்டி நிருவாகப் பொறுப்பை அவரிடம் ஒப்புவித்தார். 1580-ல் சேவப்பர் இறந்தார். ஹிந்து மதத்தைக் காப்பதற்கென்றே தோன்றியது விஜயநகர சாம் ராஜ்யம்; எனவே நாயக்கர்களும் பக்திமான்களாய் தருமம் தவறாது ஆண்டுவந்தனர். அமைதியும் செழிப்பும் தழைத்தோங்கிய சேவப்பர் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன; பல குளங்கள் வெட்டப்பட்டன. தஞ்சாவூர் சிவ கெங்கைக் குளம் செப்பனிடப்பட்டது. அதற்குத் தண்ணீர் வர வசதி செய்ய ஒரு வாய்க்காலும், சேவப்பனேரி என்ற பெரிய நீர்த்தேக்கமும் வெட்டப்பட்டது. சிவகெங்கை கோட்டையும் பழுதுபார்க்கப்பட்டது. தஞ்சாவூர் கோட்டைகள் இரண்டினுள் சிறியது சேவப்பரால் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது. திருவண்ணாமலையில் பதினொரு அடுக்குகள் அமைந்த முன் கோபுரம் சேவப்பரால், சிவநேசன், லோகநாதன் என்ற இரு சிவ பக்தர்களுடைய கோரிக்கையின்

பேரில் கட்டப்பட்டதெனத் தெரிகிறது. திருவண்ணுமலை, விருத்தாசலம், காஞ்சிவரம் கோவில் களின் பெரிய பிரகாரங்களும் இவராலேயே எடுப்பிக் கப்பட்டன. திருப்பதி விமானத்துக்கும் ஸ்ரீசைலம் விமானத்துக்கும் தங்க முலாம் பூசப்பட்டது சேவப்ப ருடைய ஆட்சியில்தான்.

சேவப்பர் வைஷ்ணவர்; விஜயநகர மன்னர்களைப் போலவே அவரும் மதத்துவேஷம் சிறிதுமின்றி, காவிரி நதியின் இரு மருங்கிலுமுள்ள சிவன் கோயில் களுக்கும் விஷ்ணு கோயில்களுக்கும் பெரும்பணி ஆற்றியுள்ளார். அந்தக் கோயில்களுக்கு மானியமாகப் பெருவாரியான நிலங்களை ஒதுக்கினர்; நகைகளும் செய்வித்தார். சிவன் கோயில்களுக்கும் விஷ்ணு கோயில்களுக்கும் மட்டுமன்றி மத்துவர்களுக்கும் சேவப்பர் நன்கொடைகள் வழங்கியுள்ளார். விஜயேந்திர தீர்த்த ஸ்ரீ பாதருக்கு 1574-ல் ஒரு கிராமம் விட்டிருக்கிறார்; உற்சவங்கள் நடைபெற வசதி செய்திருக்கிறார். மன்னர் ஸ்ரீரெங்க ராயர் பெயரால் இந்த மடத்துக்கு வழங்கப்பட்ட இன்னொரு நன்கொடைக்கும் சேவப்பரே பொறுப்பாளியாக இருந்திருக்கிறார். 1575-ல் நாவலூர், பூக்குடி என்னும் கிராமங்கள் இந்த மடத்துககு அளிக்கப்பட்டன என்று சாசனங்கள் சான்று கூறும். அவற்றில் சேவப்பரை, வீர செவ்வ பூப என்று குறிப்பிட் டுள்ளது. மேலும், நஞ்சங்கூடு ராகவேந்திரஸ்வாமி மடத்துக்குத் தஞ்சை நாயக்கர்கள் அளித்துள்ள செப்புப் பட்டயங்கள் மூன்றினுள் ஒன்று சேவப்பர் காலத்தைச் சேர்ந்தது (1580). மாயவரம் தாலுகாவில்

சில கிராமங்கள் கும்பகோணம் ஸ்ரீ விஜயேந்திரருக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டதை அது குறிப்பிடுகிறது.

சேவப்பர் தம் காலத்தில் புத்த மதத்தவர்க்கும் உதவியுள்ளார். கும்பகோணத்துக்கு ஐந்து மைல் சுற்றளவுக்குள் புத்தரின் சிலைகள் இருந்தனவென்றும் சேவப்பர் காலத்தில்கூட ஒரு புத்தர் கோயில் இருந்ததென்றும் லீடன் ஸாசனம் கூறுகின்றது. ஒரு சமயம், திருவிளந்துறையில் புத்தர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் வாய்க்கால் வெட்ட நேர்ந்த பொழுது, அதற்கு மாற்றாக திருமலைராஜபுரத்தில், இரண்டேமுக்கால் வேலி நிலம் அதற்கு விடுமாறு சேவப்பர் உத்திரவிட்டுள்ளார்.

நாஞ்சிக்கோட்டை மண்ணையார்கள் ஐவரால் சமுசாரப்பள்ளி பள்ளிவாசலுக்கு ஏழு வேலி நிலம் சேவப்பர் உத்திரவுப்படி அளிக்கப்பட்டது என்று அந்தப் பள்ளிவாசலின் மதிலில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஹிந்துக்கள், பௌத்தர்கள், முகமதியர்களுக்கு மட்டுமன்றி, அந்நிய நாட்டவரான ஐரோப்பிய வர்த்தகர்களுக்கும் சேவப்பர் உதவியளித்துள்ளார். அவர் காலத்திலோ, அதற்குச் சிறிது முன்னரோ நாகப்பட்டினத்தில் குடியேறிய போர்த்துகீசிய வர்த்தகர்களுக்குச் சேவப்பர் சமஸ்தானத்தில் செல்வாக்கு கிடைத்தது. அவர்கள் நாகப்பட்டினத்தில் கோட்டை ஒன்று கட்டிக்கொள்ள அனுமதியும் பெற்றனர். அங்கே இரண்டு மாதாகோயில்களும் தோன்றின. போர்த்துகீசிய ஆதாரங்களிலிருந்து

1550-ல் செயின்ட் சேவியர் இந்நாட்டுக்கு வந்திருந்தார் என்றும், முதன் முதல் வருஷத்திலேயே முந்நூறு ஹிந்துக்கள் மதம் மாறினர் என்றும் தெரிய வருகிறது. அரசனது ஆதரவின்றிக் கட்டடங்கள் எழுப்ப முடியுமா? சீஸர் பிரடரிக் எனும் யாத்திரிகர், 1567-ல் நாகப்பட்டினம் பெரிய நகரமாய் விளங்கியதென்றும், கிறிஸ்தவர்கள் நிரம்பியிருந்தனர் என்றும், அவர்களுள் பெரும் பகுதியினர் உயர் ஜாதியினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சேவப்பரின் ஆட்சியில் இறுதிக் காலத்தில் கோவிந்த தீட்சிதர் என்னும் கன்னடப் பெரியார் அவருக்கு மந்திரியாக அமர்ந்தார்; அவர் தொடர்ச்சியாக மூன்று நாயக்கர்களுடைய ஆட்சியில் மந்திரியாக இருந்திருக்கிறார். அவருடைய வரலாற்றை விவரமாகப் பின்னர் கூறுவோம்.

முன்னரே கூறியபடி, சேவப்பர் 1560 வரை தாமே நேரில் ஆட்சி செலுத்திப் பின்னர் ஓய்வு கொண்டிருந்துவிட்டுத் தமது முதிர்ந்த பருவத்தில் (1580-ல்) இறந்தார்.

3

அச்சுதப்ப நாயக்கர் *(1560-1614)*

சேவப்பருக்குப் பின், 1580-ல் அச்சுதப்பர் பட்டம் ஏற்றார். தஞ்சை நாயக்கர் பதவியைத் தமக்கு அளித்த அச்சுத ராயரின் நினைவாகச் சேவப்பர் தம் குமாரருக்கு அச்சுதப்பர் என்றே பெயரிட்டார். கல்

வெட்டுகளில் அவரைச் சின்ன சேவ அச்சுதரென்றும் 'சேவப்ப அச்சுதர்' என்றும் குறிப்பிட்டிருக்கிறது. சில கல்வெட்டுக்களில் அத்துடன் அய்ய என்ற அடைமொழியும் மரியாதைக்கு அறிகுறியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

அச்சுதப்பரின் மனைவி பெயரும் மூர்த்தியாம்பா தான். பிரதம மந்திரிப் பதவி வகித்த கோவிந்த திட்சிதர் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களனைத் தையும் கவனித்து வரலாயினர். அச்சுதப்பரும் இளவரசராக இருபது ஆண்டும், பின்னர் 33 ஆண்டு கள் அரசராகவும் ஆண்டிருக்கிறார். தம் தந்தையைப் போலவே தாமும் வயது முதிர்ந்த காலத்தில் தம் குமாரருக்கு இளவரசுப் பட்டம் சூட்டிவிட்டு ஓய்வு கொண்டார். ஆனல் அச்சுதப்பர் தமது மந்திரியின் யோசனையின்படி பதவியினின்றும் விலகிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அச்சுதப்பர் மிகுந்த வலுவும் புத்திநுட்பமும் எந்த விஷயத்தையும் நொடியில் முடிவு செய்யும் திறனும் வாய்ந்தவர். போர்முறையிலும் ஆயுதங்களைக் கையாளு வதிலும் அவர் நிகரற்றவர். அவரது மந்திரியோ, அதே போலக் கல்வியறிவிலும் சாஸ்திர ஞானத்திலும் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். அச்சுதப்பர் நிரம்ப பக்தி மான். தம் தந்தையாரைப் போலவே தாமும் விஜய நகர மன்னர்களிடம் மிகுந்த விசுவாசத்துடன் நடந்து கொண்டார். அவருடைய ஆட்சிக்காலம் முழுவதும் அமைதியுள்ளதாகவே இருந்தது. அவர் காலத்திய விஜயநகர சாம்ராஜ்ய மன்னர்கள் சதாசிவ ராயர், திரு மலை ராயர், ஸ்ரீரெங்க ராயர், வெங்கடாத்திரி ராயர்

ஆவர், அவர்களிடம் தஞ்சை நாயக்கர் கொண்டிருந்த இடையருத விஸ்வாசமே செஞ்சி, மதுரை இரண்டிலும் ஆண்ட நாயக்கர்கள் சுயேச்சை அடைவதற்கு தடைகல்லாக நின்றது; எனவே அவ்விருவருக்கும் தஞ்சை நாயக்கரிடம் மனக் கசப்பு தோன்றியதில் வியப்பொன்றும் இல்லை. அச்சுதப்பருடைய இராஜ்யம் தெற்கே இராமேஸ்வரம் முதல் வடக்கே விருத்தாசலம் வரையிலும், கீழ்த்திசையில் கடற்கரையிலிருந்து திருச்சிராப்பள்ளி வரையிலும் பரவிக் கிடந்தது.

தலைக்கோட்டைச் சண்டைக்குப்பின் விஜயநகர மன்னர்கள் ஆட்சி குன்றிக்கொண்டே வந்தது. ராய்ச்சூர் நதியிடைப்பகுதி (டு-ஆப்) வரை விரிந்து கிடந்த சாம்ராஜ்யம், வடபெண்ணை நதிக்கரை வரையில் பின்னெறிந்தது. வடபெண்ணைக் கரையே சுல்தான்களுடன் போராடும் களமாக அமைந்தது. அதற்கேற்ப, மன்னர்கள் பேனுகொண்டாவைத் தம் தலைநகராக்கிக் கொண்டனர். மன்னரின் தென் பகுதிப் பிரதிநிதியாக விளங்கிய வெங்கடபதி ராயர், குன்றிக் கொண்டே வந்த சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தையும் சிறப்பையும் மீண்டும் நிலைநாட்ட என்ன வெல்லாமோ முயன்று பார்த்தார். தென் திசையில் அச்சுதப்பரும் அவருடைய குமாரர் இரகுநாதரும், பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதரும் ஒன்றிநின்று, சாம்ராஜ்ய ஆதிக்கத்தைப் பாதுகாத்து வந்தனர்.

1577-ல் பீஜப்பூர் சுல்தான் பேனுகொண்டாவைச் சூழ்ந்துகொண்டு முற்றுகையிட்டான். அந்தச் சமயம் பார்த்து மதுரை நாயக்கர் தம் சுயேச்சையை ஸ்தாபிக்க முயன்றார். பீஜப்பூர் சுல்தான் இறுதியில் பின்

வாங்க நேரிட்டது என்றாலும், ராயரும் தமது தலை நகரைச் சந்திரகிரிக்கு மாற்றிக்கொள்ள வேண்டி நேரிட்டது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு (1579-ல்) பீஜப்பூர் சுல்தான் இரண்டாம் முறை படையெடுத்து வந்தான். மன்னர் ஸ்ரீரெங்க ராயர் கோலகொண்டா சுல்தானுடன் சேர்ந்துகொண்டு பீஜப்பூர் படைகளை விரட்டிவிட்டார். தஞ்சை நாயக்கர் இந்தச் சண்டைகளில் பங்கெடுத்துக் கொண்டதைப்பற்றி ஒரு விவரமும் கிடைக்கவில்லை; எனினும் விஸ்வாசமுள்ள தஞ்சை நாயக்கர்கள் ராயரைத் தாங்கியே நின்றிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

சேவப்பர் உள்ளவரை தஞ்சை ஆட்சிக்கு மற்ற நாயக்கர்களால் ஒருவித இடைஞ்சலும் ஏற்படவில்லை. அச்சுதப்பர் பட்டத்துக்கு வந்தபின் முதன் முதல் நிகழ்ச்சி வல்லம்பிரகாரத்துச் சண்டையே ஆகும். மதுரை நாயக்கரான வீரப்பர் (1572-1595) மன்னர் ஸ்ரீரெங்க ராயருக்கு எதிராகக் கிளம்பி, தஞ்சைப் பிரதேசத்தில் புகுந்து வல்லத்தைத் தாக்கினார். இதுவே மதுரை நாயக்கர்கள் சுயேச்சையடையச் செய்த முதல் முயற்சி. மன்னரின் பிரதிநிதியான வெங்கடபதிராயருடன் சேர்ந்து, அச்சுதப்பரும் வீரப்பருக்கு எதிராகப் போர் புரிந்தார். மதுரை நாயக்கர் தோல்வியுற்றார். சாம்ராஜ்ய விசுவாசமும் தற்காப்பு நோக்கமும் தவிர மதுரை நாயக்கரிடம் அச்சுதப்பருக்கும் மனஸ்தாபம் ஒன்றும் இல்லை. மதுரை வீரப்பர் தம் ஆட்சியின் இறுதியில் (1595-ல்) சுயேச்சையடைவதற்குச் செய்த இரண்டாவது முயற்சியும் பலனளிக்கவில்லை. அடுத்த பத்து ஆண்டு

களுக்கு, மதுரை நாயக்கர்கள் விஜயநகர ராயருக்கு எதிராகக் கிளம்பவேயில்லை.

1610-ல் மதுரை நாயக்கரான முத்து வீரப்பருக்கு அடங்கிய எருமைகட்டி நாயக்கன் என்னும் சிற்றரசன் தஞ்சைக்கு எதிராகக் கிளம்பி, சில கோட்டைகளையும் பிரதேசங்களையும் கைப் பற்றினன். இதொன்றுதான் சாம்ராஜ்யத் தொடர்பு இல்லாத கிளர்ச்சி. மன்னர்கள் அப்போது தங்களுக்கு வழக்கமான வட வெல்லைத் தகராறுகளில் ஈடுபட் டிருந்துவிட்டனர். ஆகவே, தஞ்சை இளவரசரான இரகுநாதர் அடுத்த வருஷத்தில் (1611) மதுரைமேல் எதிர் நடவடிக்கை எடுக்கவேண்டியதாயிற்று.

மன்னரின் பிரதிநிதியான வெங்கடபதி ராயர் சுல்தான்களுடன் போர் புரிகையில் அவருக்கு உதவி யாக ஒருமுறை இளவரசர் இரகுநாதரும் தமது படை யுடன் பேனுகொண்டாப் போருக்குச் சென்றிருந்தார். வெற்றிக்குப் பின் ஊர் திரும்புகையில், இரகுநாதர் சந்திரகிரிக்கும் போயிருந்தார். அப்போது மன்னரிடம் தமக்குள்ள செல்வாக்கைக்கொண்டு, சிறைப்பட் டிருந்த செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரை விடுதலை பெறச் செய்தார்.

அச்சுதப்பர் நாகப்பட்டணத்திலிருந்த பராசிகர் களுடன் போர் செய்து வெற்றியடைந்ததாக "சாகித்ய ரத்னகரம்" எனும் நூல் கூறுகிறது. நாயக்கர்கள் ஆட்சியில் போர்த்துகீசியர்தான் நிலையான இருப்பிடம் பெற்றிருந்தனர்; அச்சுதப்பருக்கு டச்சுக்காரரிடம் நம்பிக்கையில்லை. சாம்ராஜ்ய மன்னர் முதற்கொண்டு போர்த்துகீசியருக்கே சலுகை காட்டினர் ஆனதால்,

தஞ்சை வட்டாரத்தில் திம்மினிப்படத்தை (திருமலை ராயன்பட்டினம்) அடைய டச்சுக்காரர் எவ்வளவோ முயன்றும், பலிக்கவில்லை. எனவே இந்த நூல் கூறும் **பராசிகர்கள்** போர்த்துகீசியரே ஆவர். யாழ்ப்பாணத்து மன்னருடன் நீண்டகாலமாகப் போர் தொடுத்துவந்த போர்த்துகீசியரை எதிர்த்து, யாழ்ப்பாண மன்னருக்கு உதவியாக அச்சுதப்பர் போர் நடத்தி வெற்றியுற்ற தையே இந்நூல் குறிப்பிடும். இதுவே நாயக்கர் களுக்கும் போர்த்துகீசியருக்கும் ஏற்பட்ட மனஸ் தாபத்தின் ஆரம்பமாகும்.

இச் சிறு சண்டைகளைத் தவிர அச்சுதப்பர் காலத் தில் நீடித்த போர்களுமில்லை; வெளியிலிருந்து படை யெடுப்புகளும் கிடையாது. எனவே அவர் ஆட்சிக் காலம் பொதுவாக அமைதியாகவே இருந்தது. அச்சு தப்பர் சிறந்த விஷ்ணு பக்தர். அவர் கல்விமான்களையும் ஆதரித்தார். அநேக கோயில்களைக் கட்டிப் பழுது பார்த்ததுடன், பொதுநலத் திட்டங்களை நிறைவேற்று வதில் அச்சுதப்பர் பெரும் பொருளைச் செலவிட்டார். அவற்றில் முதன்மை வகிப்பது திருவாடிக்கு அருகில் எழுப்பப்பட்ட காவிரிக் கல்லணை (Grant Anicut). அதனால் சாகுபடிக்கு வந்த நிலங்கள் எண்ணற்றவை.

தம் தகப்பனர் எழுப்பிய திருவண்ணமலைக் கோயிலுக்கு மேலும் நன்கொடைகள் வழங்கினர்; முன் கோபுரத்துக்குத் தங்கக் கலசங்கள் அமைத்தார். திருவிடைமருதூர் சிவன் கோயிலுக்கு ஒரு கிராமத்தை அளித்தார். மூவலூர் மார்க்கசகாயர் கோவிலுக்கும் நிலங்கள் விட்டார்; அதன் வருமானத்தைக் கொண்டு திருவிளக்கேற்றும் பணி நடைபெறச் செய்தார். மானி

யங்களும் பொருளுதவியும் பெற்ற கோயில்கள் அனைத்துள்ளும் ஸ்ரீரங்கம் கோயில்தான் முதல் ஸ்தானம் வகிக்கின்றது. அவற்றை, கோவிந்த தீட்சிதரும் அவர் குமாரர் யஞ்யநாராயண தீட்சிதரும், ராமபத்திராம்பாவும் தமது நூல்களில் வெகுவாகப் புகழ்கின்றனர். மூலஸ்தானத்துக்கு மேலே தங்க விமானம் கட்டுவித்தார்; மூலவருக்கு மணிகள் பதித்த தங்கக் கவசமும் நவரத்தினங்கள் இழைத்த கிரீடமும் தங்க சிங்காதனமும் செய்தளித்தார்; வடக்கு, கிழக்கு, மேற்குக் கோபுரங்களின் வேலையைத் தொடர்ந்து செய்தார்; எட்டாவது பிரகாரத்தையும் பல மண்டபங்களையும் கட்டுவித்தார். காவிரிக்கு இறங்கும் படித்துறையையும் அடுத்தாற்போலுள்ள பூந்தோட்டத்தையும் ஏற்படுத்தியவர் அவரே. அவர் காலத்திய கல்வெட்டுக்கள் இவை அத்தனையையும் ஊர்ஜிதம் செய்கின்றன.

அரண்மனைப் பணத்துடன் பிரத்தியேக நன்கொடைகளையும் சேர்த்துக்கொண்டு விளாநகரில் அர்த்த மண்டபம், முகமண்டபங்களைக் கட்டுவித்தார், மன்னர் திருமலை ராயர் பெயரால் சிதம்பரம் திருமூலஸ்தானத்துக்கு, திருவேட்களம் எனும் கிராமத்தை வழங்கினார். ஏற்கனவே மானியங்கள் விடப்பட்ட கோயில்களுக்கு மேலும் உதவினார். அச்சுதப்பர் பெயரால், அழகப்பெருமாள் பிள்ளை என்பவர் பேராமங்கலம் எனும் கிராமத்தில் நிலங்கள் வழங்கியிருக்கிறார். ஸ்ரீரெங்க ராயர் காலத்தில், அச்சுதப்பர் பெயரால் சின்னக் காஞ்சீவரத்தில் ஐந்து கிராமங்கள் மானியமாக விடப்பட்டிருக்கின்றன. அச்சுதப்பரின் ஏஜண்டான சேஷகிரி அய்யன் என்பார், பனைப்பாக்கம்

கிராமத்தில் அச்சுதப்பர் பெயரால் நிலங்கள் வழங்கி யுள்ளார். கோவிந்த தீட்சிதரும் கோயில்களுக்கு நன் கொடைகளும் மானியங்களும் அளித்துள்ளார். 1608-ல் விஜயநகர் கோயிலில் துறைகட்டுவார் மண்டபம் ஒன்றை எடுப்பித்தார். நாயக்கரே தமது மந்திரியின் பெயரால் பணமாக நன்கொடைகள் பல அளித்துள் ளார். தந்தையைப் போலவே அச்சுதப்பர் தாமும் நெடுங்குன்றம் கோவிலுக்குச் செய்துள்ள சன்மானங் களிலிருந்து அவ்வூர் அவர்கள் பிறப்பிடம் என்பது ஊர்ஜிதமாகிறது.

அச்சுதப்பரும் ஒவ்வொரு வருஷமும் துலாதான மும் ஹிரண்யகர்ப்ப தானமும் நிகழ்த்தினர். ராமேஸ் வரத்துக்குப் பிரதி வருஷமும் யாத்திரை சென்றார். அங்குள்ள கோவிலுக்குக் கோபுரம் எடுப்பித்தார். தினந்தோறும் ஏழைப் பிராம்மணர்களுக்கு அன்னம் இட்டார். திருவிடைமருதூர், கும்பகோணம், திருவாடி முதலிய இடங்களில் புஷ்ய மண்டபங்கள் கட்டினர். பல அக்கிரகாரங்களைக் கட்டுவித்தார். காளஹஸ்தி, திருப்பதிக் கோயில்களுக்கு நன்கொடைகள் அளித் ததை, 'சங்கீத சுதா' எனும் நூல் குறிப்பிடுகிறது. அத் துடன் தேசாந்திரிகளுக்கும் வைராகிகளுக்கும் அவர் செய்த தருமங்களையும் அந்நூல் கூறுகிறது. மூர்த்தி யாம்பாபுரத்தில் தம் மனைவி பெயரால் ஒரு கிராமமும் சத்திரமும் நிறுவினர்.

சேவப்பரைப் போலவே அச்சுதப்பரும் மதத் துவேஷமின்றி, சைவ, வைஷ்ணவ, மத்துவ மதத்தி னருக்கு நன்கொடைகளை வழங்கியுள்ளார். மத்துவ மடாதிபதியான விஜயேந்திரருக்கு ஸ்ரீரெங்க ராயர்

பெயரால் வழங்கப்பட்ட மானியம் அச்சுதப்பர் இள வரசராக இருந்த காலத்தில் ஆகும்.

1577-ல் அச்சுதப்பர் பொற்கொல்லர்கள் சமூகத் துக்கும் நன்கொடைகள் உதவியுள்ளார்; மேலும் அவர்களுக்குக் குறிப்பான வரிவிலக்குகளும் அளித் திருக்கிருர்.

அச்சுதப்பர் காலத்தில் அமைதியும் செழிப்பும் மிகுந்து விளங்கின. நெல் வயல்கள் "சாலி வன"ங்க ளாகவே திகழ்ந்தன என்று வடமொழி நூல்கள் விவரிககின்றன.

கோவிந்த தீட்சிதரும் அவருடைய திறமைமிக்க குமாரர்களும் மற்ற பண்டிதர்களும், கலைத்துறைக்குச் செய்த சேவையைத் தனியாக எடுத்துரைப்போம் (அனுபந்தம்)

இவ்வளவு சிறப்புடன் நிகழ்ந்த அச்சுதப்பரது ஆட்சியின் இறுதியில் கலவரங்கள் தோன்றத் தொடங் கின. செஞ்சிப் பகுதியின் தென்கிழக்கு ஓரத்தில், கொள்ளிட நதியின் முகத்துவாரத்திலுள்ள தீவுக் கோட்டை அதிபதி சோழகன் என்பான் போர்த்து கீசியர்களுடன் கூடிக்கொண்டு மக்களுக்கும் கள்ளர் களுக்கும் பெருந் துன்பம் விளைவித்தான். போர்த்து கீசியர் யாழ்ப்பாணத்து மன்னனை விரட்டியடிக்கவே, அம்மன்னன் குடும்பத்துடன் தஞ்சைக்கு வந்து நாயக் கரைச் சரணடைந்து உதவி கோரினன். எல்லாவற் றுக்கும் மேலாக, விஜயநகர மன்னரான வெங்கடபதி ராயர் 1614-ல் இறந்தார். அவருக்குக் குமாரர் இல்லா ததால், தம் மருமகன் சிக்கதேவ ராயரை அவர் பட்டத் துக்கு நியமித்திருந்தார். ஆனல் அவருடைய மனைவிய

ருள் ஒருத்தி தன் மகனென்று சொல்லிக்கொண்ட ஒருவனுக்குப் பட்டம் கிடைக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தாள். அவளுடைய உடன்பிறந்தோனான கோலார் பிரதிநிதி ஜக்கராயன் அவள் சார்பில் இத் தகராறைக் கிளறிவிட்டான். இன்றைய வெங்கடகிரி ராஜாக்களின் மூல புருஷரான எச்சம நாயக்கர் சிக்க தேவ ராயரை ஆதரித்து நின்றார். இருதரப்புக்கும் பல தடவைகளில் போர் நிகழ்ந்தது. இதனிடையில் ஜக்க ராயர் சிக்கதேவ ராயரைக் கொலைசெய்துவிடவே. எச்சமர் அவருடைய இளங் குமரனைத் தந்திரமாக வண்ணான் மூட்டையுடன் கட்டி வெளிக்கிளப்பிவிட்டு ஜக்கராயருடன் தீவிரமாகப் போர்புரிந்தார். ஜக்கராயர் தோல்வியுற்று மதுரை நாயக்கருடைய உதவியை நாடித் தெற்கே சென்றார்; ஸ்ரீரங்கத்தை நோக்கி விரைந்தார்.

தஞ்சை நாயக்கர் சோழகன்மீது படையெடுக்க யுத்த சபையைக் கூட்டி ஆலோசித்துக் கொண்டிருக் கையில், மன்னர் இறந்த செய்தி தஞ்சையை எட்டி யது. அச்சுதப்பருக்கு இந்தப் போட்டித் தகராறில் கலந்துகொள்ள இஷ்டமில்லை. சாம்ராஜ்ய விஸ்வா சங்கொண்ட தஞ்சை நாயக்கர்கள் எச்சம நாயக்க ருடன் கூடி இளைஞன் ராம ராயரை ஆதரிக்கவேண்டி யிருந்தது. கோவிந்த தீட்சிதருடைய யோசனைப்படி அச்சுதப்பர் பதவியை விட்டு விலகிக் கொண்டார். இரகுநாதர் பட்டம் ஏற்றார். அச்சுதப்பர் சாம்ராஜ்ய பட்டத் தகராறு முற்றும் வரை தஞ்சையிலே இருந்து விட்டுப் பின்னர் தம் இறுதி நாட்களை ஸ்ரீரங்கத்தில் ரெங்கநாதர் சந்நிதியில் கழித்தார்.

1589–லிருந்தே இரகுநாதர் இளவரசராக இருந்தார். *1600*–லிருந்து அக்காலத்திய கல்வெட்டுகளில் அவர் பெயர் காணப்படுகிறது. கடைசியாக அச்சுதப்பருடைய பெயரைக் கொண்ட கல்வெட்டு **1596**-ம் வருஷத்தியதேயாகும். அச்சுதப்பர் தமது பிரதம மந்திரி கோவிந்த தீட்சதரின் யோசனைப்படி விலகிக் கொண்டது அரசியல் முறையில் முக்கியத்துவம் வாய்ந்தது.

4

இரகுநாத நாயக்கர் (1600 - 1633)

1614–ல் அச்சுதப்ப நாயக்கர் ஆட்சியிலிருந்து விலகிக் கொண்டதும் இரகுநாதர் பட்டம் ஏற்றார். குருவும் பிரதம மந்திரியுமான கோவிந்த தீட்சிதரே முடியணிவித்தார். ஹிந்து சாஸ்திர முறைப்படி முடி அணிவிக்கப் பெற்ற கடைசி தஞ்சை நாயக்கர் இரகுநாதரே ஆவார். இரகுநாத நாயக்கரின் மனைவி பெயர் கலாவதி.

விஜயநகர சாம்ராஜ்யத்துக்குத் தூண்கள்போல அமைந்தவர்கள் தஞ்சை நாயக்கர்கள். அவர்களுள் எவ்வாற்றாலும் தலை சிறந்து விளங்கியவர் இரகுநாதரே. விஜயநகர சாம்ராஜ்யம் கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் அடைந்த சீரையும் சிறப்பையும் தஞ்சை இரகுநாதர் காலத்தில் பெற்றுத் திகழ்ந்தது என்றே கூறலாம். அவரது ஆட்சிக்காலமே தஞ்சையை ஆண்ட நாயக்கர்கள் ஆட்சியில் பொற்காலம் எனத் தகும்.

நெருக்கடியான நிலையில் பட்டமேற்ற இரகுநாதர் உடனடியாகத் தீவுக்கோட்டைச் சோழகனை அடக்கு வதில் முனைந்தார். இதுவே அவரது ஆட்சியில் முதல் நிகழ்ச்சியாகும். சோழகன் செஞ்சிக்குக் கீழ்ப் பட்டவன். தஞ்சையைச் சேர்ந்த மக்களைத் துன் புறுத்தியும் சித்திரவதை செய்தும் வந்தான். சாம் ராஜ்ய பட்டத்துக்குப் போட்டி கிளம்பியதும் அதைப் பயன்படுத்திக்கொண்டு செஞ்சி நாயக்கரான கிருஷ் ணப்பரின் தூண்டுதலின் பேரில், தீவுக்கோட்டைச் சோழகன் தஞ்சைப் பகுதியை வெளிப்படையாகத் தாக்கினான். பாண்டியன் ஒருவனும் அவனுக்கு உதவியாய் இருந்தானென்று தெரிகிறது. இரகுநாதர் பெரும்படையுடன் அவனை எதிர்த்துச் சென்று, கொள்ளிட நதியைத் தாண்டி அதன் மறுகரையி லிருந்த அவனது கோட்டையைத் தாக்கிப் பலமாக முற்றுகையிட்டார். சோழகன் எதிர்த்து நிற்க மாட்டாது பணிந்தான். இரகுநாதர் அவனையும் அந்தப் பாண்டியனையும் சிறைப்படுத்தினர். அவனுடைய பகுதிகளை இரகுநாதர் தஞ்சையுடன் இணைத்துக் கொண்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. பின்னர் பாண்டியனை மட்டும் இரகுநாதர் விடுதலை செய்தார் என்றும் தெரிகிறது. சோழகன் என்னவானான் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அவன் சிறையிலிருந்து தப்பியோடினான் என்றும் வழியில் பாண்டியன் ஒரு வனால் இடைமறித்துக் கொல்லப்பட்டான் என்றும் ஊகிக்க இடமிருக்கிறது. சோழகனை வென்றது இரகுநாதரின் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். இது நிகழ்ந்தது 1615-ல்.

சோழகனை வென்றபின், 1615-ன் இறுதியிலோ 1616-ன் தொடக்கத்திலோ இரகுநாதர் தெற்கு நோக்கிப் புறப்பட்டார். காவிரிப்பூம்பட்டினத்தையும் தாண்டிச் சென்று, கீழ்க்கரையிலிருந்து இலங்கைத் தீவுக்குச் சங்கிலிகளால் இறுகப் பிணைக்கப்பட்ட தோணிப் பாலம் ஒன்றமைத்து, தமது பெரும்படைகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினர். தஞ்சைப் படைகள் கேம நாயக்கன் என்னும் தளபதியின் கீழ், போர்த்துகீசியரைத் தோற்கடித்தன; தஞ்சை நாயக்கரின் நண்பரான சங்கிலிக்குமரனை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு மன்னராக்கின. இரகுநாதரின் இவ்வெற்றி நெடுநாள் நிலைத்து நிற்கவில்லை.

போர்த்துகீசியரை வெற்றிகொண்டு திரும்பும் முன்னமே திருச்சிராப்பள்ளிப் பகுதியில் போர் மேகம் இருண்டுகொண்டு வந்தது. ஜக்கராயர் ஸ்ரீரங்கத்தில் வந்து இருந்தார். சாம்ராஜ்ய பட்டத்துப் போட்டியைப் பயன்படுத்திக்கொண்டு, தஞ்சையைத் தாக்க எண்ணியே, மதுரை நாயக்கர் 1616-ல் தமது இருப்பிடத்தையும் தமது சேனையையும் திருச்சிக்கு மாற்றிக்கொண்டார். திருச்சிக் கோட்டையை வலுப்படுத்தினர். வழக்கம்போலப் பாண்டியனும் அவர்களுடன் சேர்ந்துகொண்டான். இந்தப் பாண்டியன் புதுக்கோட்டைச் சீமையைச் சேர்ந்த ஸ்ரீவல்லப அதிவீரராம பாண்டியன் என்று தெளிவாகத் தெரிகிறது. இந்தக் கலகக் கோஷ்டியுடன் திருநெல்வேலிப் பாண்டியனும் சேர மன்னனும் சேர்ந்துகொண்டனர். எச்சம நாயக்கரும் பெரும் படையுடன், இளைஞன் ராம ராயரையும் அழைத்துக்கொண்டு, திருச்சியை

நோக்கி வந்துகொண்டிருந்தார். இதை அறிந்த இரகுநாதர் வடக்கு நோக்கி விரைந்தார். இரகுநாதரும் எச்சமரும் கூடுவதைத் தடுத்துவிட எண்ணியே, கலகக்காரர்கள் பாண்டியனைத் தூண்டிவிட்டுக் காவிரிக் கல்லணையைத் தகர்த்துவிடச் செய்தனர். இதைக் கேள்வியுற்ற இரகுநாதர் எதிரிகளின் மண்டையோடுகளைக் கொண்டே கல்லணையை மீண்டும் எடுப்பிக்கப் போவதாகச் சபதங்கூறி, தக்க படைகளுடன் அவர்களை எதிர்த்துச் சென்றார்.

1617-ல் கல்லணைக்கு அருகில் தோப்பூர் (இன்று 'தோவூர்' என வழங்குகிறது) என்னுமிடத்தில் சேனைகள் கைகலந்தன. பெரும்போர் நிகழ்ந்தது. இரகுநாதர் சேனையில், நால்வகைப் படைகளுடன் போர்த்துகீசியர்களும் யவனர்களும் (இலங்கையர்கள் போலும்) கொண்ட படை ஒன்றும் இருந்தது என்றும், வில், வாள், பட்டாக்கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களுடன் துப்பாக்கியும் (அக்னி யந்திரம்), கண நேரத்தில் கொல்லக்கூடிய ஒரு கொடிய ஆயுதமும் (நாழிகாயுதம்) கையாளப்பட்டன என்றும் தெரிகிறது. கலகக்காரர்கள் பெருந் தோல்வி யுற்றனர். ஜக்கராயர் போரில் மாண்டார்; அதுவே செஞ்சி, மதுரை நாயக்கர்களுக்குக் கை முறிந்ததுபோலாயிற்று அது முதல் தஞ்சைக்கும் மதுரைக்குமிடையே பகைமை நிலையான இடம் பெற்றது.

கலகக்காரர்களைத் தோப்பூரில் முறியடித்தபின் இரகுநாதர் வடக்கு நோக்கிச் சென்று எச்சம நாயக்கருடன் வந்து கொண்டிருந்த இளைஞர் ராம ராயரைச் சந்தித்து அவரைக் கும்பகோணத்தில் மன்னராகப்

பிரகடனம் செய்தார். தோப்பூர் தோல்விக்குப் பின், ஜக்கராயருடைய தம்பியுடன் கூடிக்கொண்டு செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கர், மன்னர் தரப்புக் கோஷ்டியை எதிர்க்க வந்தார். இரகுநாதருடைய தளபதி அவர்களை முறியடித்து ஓடச்செய்து புவனகிரியைக் கைப்பற்றிக்கொண்டான். இது நிகழ்ந்தது 1617-ன் தொடக்கத்தில் ஆகும்.

இந்தத் தோல்விகளுக்குப் பின், மதுரை, செஞ்சி நாயக்கர்களின் பலம் குன்றத் தொடங்கியது. அவர்கள் மீண்டும் வலுவுற்றுக் கிளம்ப வேண்டுமென்று எண்ணங் கொள்வதற்கே பல வருஷங்கள் பிடிக்கும் போலாயிற்று. இரகுநாதருடைய ஆட்சி உச்சநிலையை அடைந்தது. மூன்று நாயக்கர்களுக்குள் தஞ்சை நாயக்கரே வலுவுள்ளவராக விளங்கினர். குன்றிக் கொண்டே வந்த விஜயநகர சாம்ராஜ்யம் சிறிது காலம் தலைதூக்கி நின்று, முகம்மதியர்களைத் தென் இந்தியாவில் தலையெடுக்க விடாமல் தடுத்தது.

தோப்பூர் வெற்றிக்குப் பின் இரகுநாதர் தம் தந்தையைப் போய்ப் பார்த்து மரியாதை செலுத்தினரென்று சாஹித்ய ரத்னகரம் கூறுவதால், அச்சுதப்பர் 1617-க்குப் பின்னரே இறந்திருக்க வேண்டும் என்றுகிறது.

இரகுநாதருடைய வெளிநாட்டு விவகாரங்களில், அவர் யாழ்ப்பாணத்து மன்னருக்கு உதவி வந்தது கடைசிவரையில் வெற்றி அளிக்கவில்லை. 1617-ல் தஞ்சைப் படைபிடம் தோல்வியுற்ற போர்த்துகீசியர், சங்கிலிக்குமரனை அமைதியாக ஆட்சிசெய்ய விடவில்லை. யாழ்ப்பாணத்து மன்னனும் நெஞ்சு

உரங் கொண்டவன் தான்; அவன் போர்த்துகீசியருக்கு கப்பங் கட்ட மறுத்தான். கண்டி மன்னனுக்கு ஆதர வளித்துப் போர்த்துகீசியரை இலங்கையிலிருந்தே விரட்டிவிடச் சூழ்ச்சி செய்தான். கோவா போர்த்து கீசிய கவர்னரால் அனுப்பப்பட்ட ஒலிவியர் என்னும் போர்த்துகீசிய தளபதி, சங்கிலிக்குமரனை வென்று அடக்கினான். சோழமண்டலக் கரையி லிருந்த 'கரையாளர்கள்' (பரவர்கள்) தஞ்சை மன்னரின் உதவி பெற்றுப் பல முறை போர்த்துகீசியருடன் போராடினர். 'வருணகுலத்தவ'னான கேம நாயக்கன் மிகுந்த வீரத்துடன் போர் புரிந்தான் எனினும் இறுதி யில் தோல்வியே அடைந்தான். இவ்விதமாகக் கரை யார்கள் ஆறு முறை முயன்றும் வெற்றி கிட்டாது போகவே, இரகுநாதர் இந்த நடவடிக்கையையே கைவிட்டுவிட்டார் என்று தோன்றுகிறது. அவர் அடைந்த ஒரே வெற்றி அச்சுதப்பர் ஆட்சியிறுதியில் என்று வெளி ஆதாரங்களிலிருந்து தெளிவாகிறது.

இரகுநாதர் ஆட்சியில் டேனிஷ், டச்சு, ஆங்கி லேய வர்த்தகர்கள் அவர் நாட்டில் காலடிவைத்தனர். ஏற்கனவே போர்த்துகீசியர்கள் நாகப்பட்டினத்தில் நிலையாக இருந்தனர்; செஞ்சிப் பகுதியில் ஸான் தோமிலும் இருந்தனர். இலங்கைக்கு வந்த டச்சுக் கப்பலிலிருந்து தப்பி, எதிர்பாராதவண்ணம் கடலில் நீந்திச் சோழமண்டலக் கரையேறிய டேனிஷ்காரர் சிலர் தஞ்சைக்கு வந்தனர். நாயக்கரிடம் அனுமதி பெற்றுத் தரங்கம்பாடியில் இடம் அமைத்துக் கொண்டு, கட்டிடங்களும் எழுப்பினர். அவர்களுடன் கப்பலில் மாலுமியாக வந்த ஜான்சன் என்ற

ஆங்கிலேயன் தன் நாட்டவருக்குக் காரைக்கால் பிரதேசத்தைப் பெறவேண்டிச் செய்த முயற்சிகள் அனைத்தும், டேனிஷ்காரர் சூழ்ச்சியினாலும் செஞ்சி கிருஷ்ணப்பர் அளவுக்கு மீறிக் கட்டணத் தொகைகளைக் கேட்டதாலும் தோல்வியுற்றன, பின்னர் செஞ்சிப் பகுதியில் புதுச்சேரியைப் பெற ஆங்கிலேயர் செய்த முயற்சியையும், டேனிஷ்காரர்கள் செஞ்சி நாயக்கரைத் தம் வசமாக்கிக்கொண்டு தோல்வியுறச் செய்தனர்.

இரகுநாதருடைய ஆட்சிக் காலத்தின் பிற்பகுதி முழுவதும் அமைதியாகவே இருந்தது. அவருடைய ஆதிக்க எல்லை நிலைத்து நின்றது. ராமநாதபுரம் ஜில்லாவில் ,திருக்கோஷ்டியூர் வரையிலும், திருச்சி ஜில்லாவில் லால்குடி வரையிலும், செங்கற்பட்டு ஜில்லாவில் கோவிந்தவாடி வரையிலும், வடஆற்காடு ஜில்லாவில் நெடுங்குன்றம், நாரத்தம்பூண்டி வரையிலும் அவருடைய இராஜ்ஜியம் பரவியிருந்தது.

அச்சுதப்பரைப்போலவே இரகுநாதரும், இராஜ்ஜியத்தில் பல இடங்களிலும் தம் காரியஸ்தர்களை நியமித்திருந்தார். அவர்களுக்குப் போதிய அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன; அதிகார எல்லையும் வரையறுக்கப்பட்டிருந்தது. நாயக்கர்களின் பிறப்பிடமான நெடுங்குன்றத்தில் (வட ஆற்காடு ஜில்லா) ஒரு காரியஸ்தர் இருந்தார். இரகுநாதர் காலத்தில் திருவண்ணாமலையில் காரியஸ்தர் ஒருவரும் இல்லை. நெடுங்குன்றத்தில், காரியம் திருவம்பலம் பிள்ளையும் பொதுமக்களும் சேர்ந்து தருமபுத்திரர் கோயிலுக்கு நிலங்கள் விட்டிருக்கின்றனர். இந்தக் கல்வெட்டில்

நாயக்கரை, "விஜய இரகுநாதர்" என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்தக் கல்வெட்டின் காலம் 1584 ஆகும் —அதாவது இரகுநாதர் இளவரசராக இருக்கையில்.

நாயக்கருடைய பெயர் தவிர, மந்திரி கோவிந்த தீட்சிதர் பெயரும் பல கல்வெட்டுகளில் இடம் பெறுகிறது. சிலவற்றில் அவரைப் "பிரதானி" என்று குறிப்பிட்டிருக்கிறது. நாயக்கருடைய காரியஸ்தர்கள், அச்சுதமங்கலம், நோடியூர், திருக்கோஷ்டியூர், ஸ்ரீவாஞ்சியம் முதலிய இடங்களில், மன்னர் பெயரால் பல நன்கொடைகள் வழங்கி யிருக்கின்றனர். நாச்சியார்கோயிலில், "அட்டவீணை" ரெங்கப்பையன் என்ற கணக்கர், நாயக்கர் பெயரால் அம்மனுக்கு ஒரு மண்டபம் எடுப்பித்தார்.

இரகுநாதர் தாமே நேரில் பல நன்கொடைகள் வழங்கியுள்ளார். கைலாசபுரம் கிராமத்தைக் கோயிலுக்குச் சர்வமானியமாக விட்டாரென்று காரத்தம் பூண்டிக் கல்வெட்டுகள் கூறும். ஒரு பகுதி பழுதுற்ற கோட்டூர் சாசனம் ஒன்று, பத்துவேலி நிலம் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது; இதர விவரங்களைப் பழுதுற்ற பகுதியில் குறிப்பிட்டிருந்ததுபோலும். மத்வ மடாதிபதி விஜயேந்திரருக்குப் பின்வந்த சுதீந்திரருக்கு இரகுநாதர் கனகாபிஷேகம் செய்வித்தார்.

கிறிஸ்தவப் பறங்கியருக்கும் நாகப்பட்டினம், தாங்கம்பாடி என்னும் இரண்டு இடங்களில் தங்கி வியாபாரம் நடத்த இரகுநாதர் அநுமதி அளித்தார்.

இரகுநாதர் நிரம்ப பக்திமான்; ஆசார சீலர்; தமது பட்டாபிஷேகத்தை யொட்டித் துலாபாரம் நிகழ்த்திப் பெருவாரியான தானங்களைச் செய்தார்.

தினந்தோறும் காலையில் தமது பூஜை முடிந்ததும், வந்திருந்தோர் அனைவருக்கும் நன்கொடைகளை அளவின்றி வழங்கினர், அக்கிரகாரங்கள் பலவற்றைத் தோற்றுவித்தார். இரகுநாதர், கும்பகோணம் ராமஸ்வாமி கோயிலையும் ராமேஸ்வரம் ராமர் கோயிலையும் ஸ்ரீரங்கம் ராமர் கோயிலையும் கட்டினரென "சங்கீத சுதா" என்னும் நூல் குறிப்பிடுகிறது. கும்பேஸ்வரர் கோயில் கோபுரமும் மண்டபமும் அவரால் எழுப்பப் பட்டனவே. பசுபதிகோயிலில் தேனுநாதஸ்வாமிக்கும் திருவையாற்றில் பஞ்சநதீஸ்வரருக்கும் நடைபெறும் தேர்விழாக்களில் இரகுநாதர் மிகுந்த சிரத்தை கொண்டிருந்தார். சீனிவாசஸ்தலம் (உப்பிலியப்பன் கோயில்), சம்பேசர் (மன்னார்குடி) கோயில்களில் கட்டிடங்களை விஸ்தரித்தார். தம் முன்னோர்கள் ஏற்படுத்திய தருமங்களைத் தொடர்ந்து நடத்தியதுடன் தாமும் புதிதாகப் பல தருமங்களைச் செய்தார்.

இரகுநாதருடைய போர்த்திறமையும் வீரமும் தவிர, அவருடைய கல்வித்திறமையும் கல்விமான்களை ஆதரிக்கும் வண்மையும் போற்றுதற்குரியது. இரகுநாதர் வடமொழி, தெலுங்கு இரண்டிலும் சிறந்த பண்டிதர்; அவர் இலக்கியம் (சாகித்யம்), இசை (சங்கீதம்) இரண்டு துறைகளிலும் நிபுணர். அரசியல் நூலை (தண்டநீதி) யும் நன்கு பயின்றவர். இளமையிலிருந்தே அவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர்; அப்போதே அவர் இரண்டு ஜாமப் பொழுதில் "பாரிஜாத அபஹரணம்" என்னும் தெலுங்கு காவியத்தை இயற்றி முடித்தார். சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் அவரால் இயற்றப்பட்ட காவியங்கள்

பல உள்ளன. பாரிஜாத அபஹரணம், வால்மீகி சரித்திரம், ருக்மணி பரிணயம், யக்ஷ கானம், ராமாயணம், என்பன தெலுங்கு நூல்களாகும். வடமொழி நூல்களில் 'சங்கீத சுதா', 'பாரத சுதா' இரண்டும் இடம் பெறும். இரகுநாதருக்கு எட்டு மொழிகளில் பயிற்சி உண்டு என்று தெரிகிறது.

சங்கீதத் துறையில் இரகுநாதர் சிறந்த ஆதாரமாகக் கொள்ளத் தகுந்தவர். கர்னாடக சங்கீதத்தை நிர்மாணித்தவர் அவரே என்றும் கருதப்படுகிறது. வீணையில் அபூர்வமான இராகங்களை வாசிப்பதில் அவர் சமர்த்தர். ஜயந்தசேன போன்ற புதிய ராகங்களையும், ராமனந்தா போன்ற புதிய தாளங்களையும் தோற்றுவித்தவர் அவரே என்று சொல்லப்படுகிறது. இரகுநாதர் மற்றவர்களுக்கும் இலக்கியம், இசை இரண்டும் பயிற்றுவித்தார். 'சங்கீத சுதா' என்ற அவருடைய இசை நூலுக்குக் கோவிந்த தீட்சிதரே முகவுரை எழுதியுள்ளார். இந்த நூலை இருவரும் சேர்ந்து இயற்றினர் என்று கருதவும் இடமுண்டு.

கல்வி கேள்விகளில் இவ்வளவு சிறந்த இரகுநாதர் கல்விமான்களைப் பெரிதும் ஆதரித்தார் என்பதில் வியப்புக்கு இடமில்லை. ராமபத்திராம்பா என்னும் புலவி, தாம் எழுதிய நூலில் இரகுநாதர் அவையில் கலைமகள் களிநடனம் புரிந்தாள் என்று வருணிக்கிறார். பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதரே பெரிய அறிவாளி; வடமொழிப் புலமை நிறைந்தவர். அவருடைய இரு குமாரர்களான யஞ்யநாராயண தீட்சிதரும் வேங்கடமகியும் அவையை அலங்கரித்தனர். ராஜ சூடாமணி தீட்சிதரும், பாஸ்கர தீட்சிதரும், குமார

தாத்தாசாரியாரும், பெண்மணிகள் ராமபத்ராம்பாவும் மதுரவாணியும் அவையின் அணிகலன்களாகத் திகழ்ந்தனர். யஞ்யநாராயண தீட்சிதருக்கு இரகுநாதரே தர்க்கம், வியாகர்ணம், மீமாம்ஸை, வேதாந்தம் இவற்றைப் போதித்தார். அதற்கு நன்றி கூறுவான் வேண்டி, யஞ்யநாராயண தீட்சிதர் தமது 'சாஹித்ய ரத்னுகரம்'' என்னும் வடமொழி நூலை இயற்றினுர். இரகுநாதருடைய அவைக்கு ஒருமுறை விஜயஞ் செய்த, கொண்டா சௌடய்யா என்ற மாட்லா ஆனந்த ராயருடைய ஆஸ்தான வித்வான், அத்தனை வித்வான்களையும் கண்டு அதிசயித்தார் என்று தெரிகிறது. சேமகூரி வேங்கடகவி என்பவர் தாம் இயற்றிய "விஜய விலாசமு'' என்ற நூலை இரகுநாதருக்கே சமர்ப்பித்தார்

இரகுநாதர் அடிக்கடி புலவர் போட்டிகளை (பரிஷத்) நடத்துவதுண்டு. ஒரு தடவை பெண்மணி ராமபத்திராம்பாவே அந்தப் போட்டியில் வெற்றி பெற்ருர் என்றும் தெரிகிறது.

நாடகத் துறையில் இரகுநாதர் மிகுந்த சிரத்தை கொண்டிருந்தார். அவரது அரண்மனைக்குள் ஒரு நாடக அரங்கு இருந்ததென்றும், அங்கு நாயக்கர் முன்னிலையில் நாடகங்கள் நடிக்கப் பெறுவதுண்டு என்றும் கோவிந்த தீட்சிதரும் நாயக்கருடனமர்ந்து நாடகங்களைக் கவனிப்பதுண்டு என்றும் தெரிகிறது. இரகுநாதரே யக்ஷ கானங்களை சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் இயற்றியுள்ளார் அவர் காலத்தில், தெற்கத்திய தெலுங்கு இலக்கியம் அபிவிருத்தி அடைந்தது; அதிலும் குறிப்பாக, யக்ஷ கானம் என்ற

நாடகவகை இரகுநாதர் காலத்தில்தான் உருவாயிற்று என்பது குறிப்பிடத்தகும்.

வடமொழி இலக்கியமும் தெலுங்கு இலக்கியமுமே பெரிதும் வளர்ச்சியுற்றன என்றாலும், தமிழ் மொழி புறக்கணிக்கப் படவில்லை. கோவிந்த தீட்சிதரின் ஆதரவில் திருவையாற்றுத் தல புராணம் தமிழில் மொழியாக்கம் பெற்றது இரகுநாதர் காலத்தில்தான்.

இத்தனை சிறப்பு வாய்ந்த இரகுநாத நாயக்கரை உள் நாட்டு நூல்கள் பல புகழ்ப் பெயர்கள் சூட்டிச் சிறப்பிக்கின்றன. அவரை சாஹித்திய போஜன் என்றும், அபிநவ போஜன் எனறும் புகழ்கின்றன. அக்காலத்திய ஆங்கில வர்த்தகக் கூட்டத்தினரின் தஸ்தவேசுகள், இந்நாட்டில் அக்காலம் ஆண்ட அரசர்களுள் இரகுநாதரே முதலிடம் பெற்றவர் என்றும், அவர் அந்நிய நாட்டினருக்குச் சமத்துவமான நியாயம் வழங்கினர் என்றும் புகழ்ந்து கூறுகின்றன. பிற்காலத்தில் தஞ்சைச் சரித்திரத்தை எழுதப் புகுந்த ஆங்கிலேயர் ஒருவர் இரகுநாதரை, "அவர் காலத்திய சாலமன்" என்றே வருணித்துள்ளார்.

இவ்வளவு சிறப்புக்கும், இரகுநாதருக்குப் பெரிதும் துணைக் கருவியாக அமைந்தவர் திறமைமிக்க மந்திரி கோவிந்த தீட்சிதரே ஆவார். பின்னர் வந்த விஜயராகவ நாயக்கருக்கு இத்தகைய பிரதம மந்திரி வாய்க்காமல்தான் தஞ்சை நாயக்கர் ஆட்சி மதுரை நாயக்கருக்கு அடிபணிந்து, இறுதியில் மண்ணோடு மண்ணாயிற்று என்பது மறுக்க வொண்ணாத உண்மை. எனவே கோவிந்த தீட்சிதரைப் பற்றிய வரலாற்றுக்

குறிப்பு இல்லாத தஞ்சை நாயக்கர்களின் சரித்திரம் பூர்த்தியானதாகாது.

5

பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதர் (1575-1634)

அச்சுதப்பர், இரகுநாதர் இருவர் காலத்திலும் தொடர்ந்து நாட்டின் நிர்வாகப் பொறுப்பில் பெரும் பங்கு கொண்டவர் பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதர் ஆவார். அவர் மைசூரைச் சேர்ந்த கன்னடப் பிராம் மணர். வஸிஷ்ட கோத்திரத்தில் வந்தவர்; சிறந்த சாஸ்திர ஞானம் படைத்தவர்; மிகுந்த அறிவாளி; நல்ல ஒழுக்கம் உள்ளவர். அன்றாடம் தவறாது அக்னி ஹோத்திரம் செய்பவர். சேவப்ப நாயக்கருடைய ஆட்சியின் இறுதிப் பகுதியில் அவர் தஞ்சையை வந்தடைந்தார். அவருடைய புலமையை மெச்சி, சேவப்பர் அவருக்கு மிகுந்த மரியாதை செலுத்தினார்.

சீக்கிரத்தில் கோவிந்த தீட்சிதருக்கு ராஜப்புரோகிதர் பதவி கிட்டியது. பின்னர் அவர் இளவரசருக்குக் குருவும் ஆனார். காலக் கிரமத்தில், தம் திறமையினாலேயே அவர் பிரதம மந்திரிப் பதவியையும் பெற்று நிர்வாகத்தைச் சிறப்பாகவும் நம்பிக்கையாகவும் நடத்தினார்.

அச்சுதப்பர் தமது பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதர் பெயராலேயே பல நன்கொடைகள் வழங்கினார். இரகுநாதர் தமக்குக் குருவும் பிரதம மந்திரியுமான அவரிடம் அளவில்லாத வணக்கமும் நன்றியும் செலுத்தினார். தம் படையெடுப்புக் காலங்களில், அவர்

வசமே ராஜ்ய நிர்வாகத்தை விட்டுச் சென்றுள்ளார். கோவிந்த தீட்சிதரும் நாயக்கர்களின் பெருமையை யும் விஜயநகர சாம்ராஜ்யத்தின் பெருமையையும் நிலைநாட்டினர்.

பரம வைணவர்களான தஞ்சை நாயக்கர்களின் ஆட்சியில் மதத் துவேஷமின்றி சிவ, விஷ்ணு ஆல யங்களுக்கு நன்கொடைகளும் திருப்பணிகளும் நடந் தேறியதற்குப் பொறுப்பாளியாக இருந்தவர் பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதரே.

கோவிந்த தீட்சிதர் பல யாகங்கள் செய்தார். அவர் வாஜபேய யாகம் செய்கையில், அவரது மாணாக் கரான இரகுநாதர் தம் குருவுக்குக் குடை பிடித்து நின்று மரியாதை செலுத்தினர். அம்மாதிரிக் காலங் களில் தெருக்களும் கிராமங்களும்கூடத் தானமாக வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய ஏச்சன்குடி (ஏகாதசி அக்கிரகாரம்), மகாதானபுரம், தீட்சித சமுத்திரம் முதலிய ஊர்களும், மாயவரம், திருவிடை மருதூர், திருவையாறு இவ்விடங்களிலுள்ள மகா தானத் தெருக்களும் இதற்குச் சான்று.

பிரதம மந்திரியின் பெயருக்கு நினைவுச் சின்னங் களாக, வேறு பல ஊர்களும் இடங்களும் இன்றும் இருந்து வருகின்றன. கோவிந்தக்குடி, கோவிந்த புரம், அய்யம்பேட்டை எனும் ஊர்களும், அய்யன் குளம் எனும் குளமும், தஞ்சையிலுள்ள அய்யன் கடைத் தெருவும் அவர் புகழை நிலைநாட்டுகின்றன.

கும்பகோணம் கும்பேசுவரர் கோயிலிலும், திரு வையாறு பஞ்சநதீஸ்வரர் கோயிலிலும் உள்ள இலிங் கங்கள் தீட்சித லிங்கங்கள் என்றே வழங்கப்பெறும்.

அவைகளைத் தீட்சிதரே ஸ்தாபித்தாரா, அல்லது அவர் பெயரால் அவை ஸ்தாபிக்கப் பெற்றனவா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மக்கள் பிரதம மந்திரியிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். கும்பகோணம் மகாமகக் குளத்தின் பதினாறு மண்டபங்களையும் கட்டிச் செப்பனிட்ட திருப்பணிகளில் கோவிந்த தீட்சிதர் கொண்ட பங்கு இன்றைக்கும் மக்கள் மனத்தில் பசுமையாக நிற்கின்றது. திருவையாறு, திருவலஞ்சுழி, விருத்தாசலம், கும்பகோணம் முதலிய ஊர்களில் பல புஷ்ய மண்டபங்களைக் கட்டினார். கும்பகோணம், விஜயராகவபுரம், ஸ்ரீ ரெங்கம் முதலிய இடங்களில் இராமஸ்வாமி கோயிலை எடுப்பித்தார். பட்டீஸ்வரன்கோயிலுக்குச் சிறப்பான நன்கொடைகள் வழங்கிக் கட்டிடங்களைக் கட்டினார். அக்கோயிலில் பிரதம மந்திரி உடையில் கோவிந்த தீட்சிதர், அவருடைய மனைவி இருவருடைய உருவச் சிலையும் இன்றும் உள்ளன. விளாநகர் துறைகட்டுவார் மண்டபமும், சாரங்கநாத ஸ்வாமி மடத்தின் ஆசார வாசலும், கும்பகோணத்து அனந்த கல்யாண மண்டபமும், கும்பகோணம் ராஜா பாடசாலையும் அவரால் தோற்றுவிக்கப்பட்டனவே. வேத சாஸ்திர பாடசாலைகள் பலவற்றை அவர் ஏற்படுத்தியிருக்கிறார்.

இவைகள் ஒருபுறமிருக்க, கோவிந்த தீட்சிதர் வடமொழிப் புலமை நிறைந்தவர்; சிறந்த எழுத்தாளர். ஜைமினி சூத்திரங்கள், கௌமாரில சூத்திரங்கள் இவற்றிற்கு விரிவுரைகள் (பாஷ்யங்கள்) எழுதியிருக்கிறார்.

சங்கீத சுதா எனும் இசைநூலை மன்னருடன் சேர்ந்து இயற்றியுள்ளார். அவருக்கு ஆறு தர்சனங்களிலும் தேர்ச்சியுண்டு; அவரை அத்வைத வித்யாசார்யர் என்றே அழைத்தனர், நிறைந்த இசை ஞானத்துடன், அவர் சோதிடத்திலும் திறமை வாய்ந்தவர். ஒரு சோதிட நூலும் அவர் எழுதியுள்ளார்.

கோவிந்த தீட்சிதரின் மனைவி பெயர் நாகமாம்பா. அவருக்குப் புதல்வர்கள் எண்மர் என்பர். அவர்களுள் யஞ்யநாராயண தீட்சிதரும் வேங்கடமகியும் சிறந்து விளங்கினர். சிவ சஹஸ்ர நாம பாஷ்யம் எழுதிய லிங்கத்வாரி என்பவரும் அவருடைய புதல்வர் என்று தெரிகிறது. கோவிந்த தீட்சிதர் காலத்திய அறிஞர்களியற்றிய நூல்களைப்பற்றி அநுபந்தத்தில் காண்க.

தர்மசாஸ்திரங்களை எடுத்துக் கூறுவதில் கோவிந்த தீட்சிதர் நிபுணர் என்று கூறப்படுகிறது. அவர் நியாயம் வழங்குவதில் சமர்த்தர் என்றும் பட்டீஸ்வரன் கோயில் பட்டுநூற்காரர்களுக்கும் இதர வியாபாரிகளுக்குமிடையே தோன்றிய தகராறைச் சமரசமாக அவர் தீர்த்துவைத்தார் என்றும் ஒரு கல்வெட்டு கூறுகிறது.

கோவிந்த தீட்சிதர் விஜயராகவர் காலத்திலும் மந்திரியாக இருந்தார் என்று அவர் குமாரர் வேங்கடமகி கூறுகிறார். எனவே, 1634-ல் விஜயராகவர் பட்டமேற்கையில் அவர் இருந்தாரென்றும், அதன் பிறகு சின்னாட்கழித்தே இறந்திருக்க வேண்டுமென்றும் தெரிகிறது. தம் இறுதிக் காலத்தில் கோவிந்த தீட்சிதர் கும்பகோணம் மங்களாம்பிகை சன்னிதானத்தில்

கடுமையான விரதங்களை மேற்கொண்டார் என்றும் தெரிகிறது. விஜயராகவ நாயக்கர் காலத்துத் தெலுங்கு நூல்களில் கோவிந்த தீட்சிதரைப் பற்றி யாவது, யஞ்யநாராயண தீட்சிதரைப் பற்றியாவது ஒரு குறிப்பும் இல்லை. 1634-ம் வருஷத்திய பட்டீஸ்வரன்கோயில் சாசனத்தில்தான் அவருடைய பெயர் கடைசியாக இடம் பெறுகிறது. இரகுநாத நாயக்கரை விஜயநகர மன்னரான கிருஷ்ணதேவ ராயருக்கு ஒப்பிடுவோமானால், கோவிந்த தீட்சிதரை அவருடைய மந்திரி சாளுவ திம்மருக்கு ஒப்பிடுதல் மிகவும் பொருந்தும்.

6

விஜயராகவ நாயக்கர் (1633-1673)

இரகுநாத நாயக்கருக்குப்பின் அவரது பட்ட மகிஷி கலாவதியின் குமாரர் விஜயராகவர் 1633-ல் பட்டம் ஏற்றார். 1634-ம் வருஷத்திய பட்டீஸ்வரன் கோயில் சாசனத்தின்படி, பட்டீஸ்வரன்கோயில் தகராறு நாயக்கர் அய்யன் (இரகுநாதர்), கோவிந்த தீட்சிதர் முன்னிலையில் தீர்க்கப்பட்டதென்று தெரிவதால், இரகுநாதர் தம் குமாரர் பட்டம் ஏற்றபின் சிலகாலம் உயிருடனிருந்தார் என்பது நிச்சயமாகிறது. எனவே விஜயராகவர் தம் இரு சகோதரர்களைக் கொலைசெய்து பட்டத்தை அபகரித்துக் கொண்டார் என்று கூறும் வரலாறு சிறிதும் ஆதாரமற்றது என்பது தெளிவு.

நாற்பது வருஷ காலம் ஆண்ட விஜயராகவரின் ஆட்சி சம்பந்தமாக, அக்காலத்து இலக்கிய நூல்

களைத் தவிர கல்வெட்டுகளின் ஆதாரம் அதிகமாக இல்லை. 1656 வரைதான் கல்வெட்டுகளின் சான்று கிடைத்துள்ளது. க்ஷீணித்துக்கொண்டே வந்த சாம்ராஜ்யத்தினிடம் விஜயராகவர் விஸ்வாசமாகவே இருந்திருக்கிறார். ஆனால் மன்னருக்கு அவர் ஒழுங்காகத் திறை செலுத்தினரா என்பதற்குத் திட்டமான ஆதாரங்களில்லை.

விஜயநகர சாம்ராஜ்யம் குன்றிக் கொண்டே வந்தது. கடைசி மன்னரான மூன்றும் ஸ்ரீரெங்க ராயர் சமர்த்தர்தான்; ஆனால் அவருக்குக் கீழ்ப்பட்ட நாயக்கர்கள் அவரைத் தாங்கி நிற்காததால் அவர் பட்ட கஷ்டம் எல்லையற்றது. தஞ்சை நாயக்கர் மட்டும் அவருக்கு உதவியாய் நின்று செஞ்சியைத் தாக்கிப் போரிடவே, ஸ்ரீரெங்க ராயர் வடக்கே திரும்பிக் கோலகொண்டாப் படைகளை முறியடிக்க முடிந்தது. இது விஜயராகவ நாயக்கர் ஆட்சியில் முதல் வருஷத்திலேயே நிகழ்ந்ததாகும். ஆனால் செஞ்சி நாயக்கரும் மதுரை நாயக்கரும் இதற்காகத் தஞ்சை நாயக்கர் மேல் பழி வாங்கக் காத்துக்கொண்டு இருந்தனர்.

ஸ்ரீரெங்க ராயர் தெற்கே புறப்பட்டு வந்து ஒரு வருஷத்துக்கு மேலாகவே காத்திருந்து, மூன்று நாயக்கர்களுடைய ஆதரவையும் எவ்வாருகிலும் பெற்று விடவேண்டுமென்று எவ்வளவோ முயன்றார், ஆனால் பலிக்கவில்லை. விஜயநகர சாம்ராஜ்யமும் நாளடைவில் க்ஷீணித்துக்கொண்டே வந்தது. பேனுகொண்டாவிலிருந்து சந்திரகிரிக்கும், அங்கிருந்து சில காலத்துக்கெல்லாம் வேலூருக்கும், மன்னர்கள் தம் தலைநகரை மாற்றிக்கொள்ள நேரிட்டது. முகம்மதியர்

களின் தொல்லை மட்டும் ஓய்ந்தபாடில்லை. இருப்பினும், 1645-ல் ஸ்ரீரெங்க ராயர் ஆங்கிலேயருக்குச் சென்னப்பட்டணத்தை அளிக்கையில் அவருடைய நிலைமை வலுவுள்ளதாகவே இருந்திருக்கிறது. முகம்மதியப் படைகள் கீழ் நோக்கி வந்துகொண்டேயிருக்க, நாயக்கர்களும் ஒன்று திரண்டு அவரைத் தாங்கி நிற்க மறுத்ததினுல், ஸ்ரீரெங்க ராயர் உதவுவார் இன்றித் தன்னந் தனியரானுர்; தஞ்சைக்கு வடக்கே இருந்த காடுகளில் சில காலம் ஒளிந்திருந்தார். அவரை விரட்டிக் கொண்டு தெற்கு நோக்கி வந்த முகம்மதியர் படை, செஞ்சிக்கோட்டையைத் தாக்கி அதை 1646-ல் கைப்பற்றியது. செஞ்சிக்கோட்டை முற்றுகையின்போது பீஜப்பூர் படைகளுக்கு எதிராக, கோலகொண்டா முகம்மதியரை மதுரை திருமலை நாயக்கர் உதவிக்கு அழைத்தார். உதவிக்கு வந்த கோலகொண்டா படைகள், பீஜப்பூர் படைகளுடன் கூடிக்கொண்டு துரோகஞ் செய்தன. பிறகு திருமலை நாயக்கர் எவ்வளவோ தீவிரமாகப் போராடியும், செஞ்சிக்கோட்டை துருப்புகளுள்ளேயே ஒற்றுமை இல்லாததால், செஞ்சி முகம்மதியர் வசமாயிற்று. இத்துடன் விஜயநகர சாம்ராஜ்யம் மறைந்தது என்றே கூறிவிடலாம். ஊரைப் பாழ்படுத்திச் சூறையிட்டுச் சென்றன முகம்மதியப் படைகள். செஞ்சியின் வீழ்ச்சிக்குப்பின், பீஜப்பூர் படைகள் வெற்றி வெறியுடன் தஞ்சையை நோக்கி விரைந்தன. மன்னர் மைசூருக்கு ஓடி ஒளிந்துகொண்டார். அந்த நிலையில் தன்னந் தனியரான தஞ்சை விஜயராகவர், தாம் முகம்மதியர்களுக்குப் பணிந்துவிடுவதே நலமெனக் கருதிப் பணத்தைக்

கொடுத்து சமாதானம் செய்து கொண்டார். இது நிகழ்ந்தது 1646-ல்.

இதனிடையில் மைசூர் அரசன் கண்டீரவ நரச ருடைய உதவியுடன் மன்னர் ஸ்ரீரெங்க ராயர் தாம் இழந்த பகுதிகளைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றி வர லானார். அவருக்கு உதவிய மைசூர் அரசனைத் தண் டிக்க எண்ணி, பீஜப்பூர் படைகள் இரண்டாம் முறை தெற்கே படையெடுத்து வந்தன. தஞ்சை சும்மா இருந்துவிட்டது. எனவே மைசூர் மன்னன் பீஜப்பூர் படைகளுக்குப் பணிந்துவிட்டான். உதவு வாரின்றி மன்னர் ஸ்ரீரெங்க ராயர் மீண்டும் காடுகளில் சுற்றித் திரியலானார். விஜயநகர சாம்ராஜ்யம் நொறுங்கிக்கொண்டே வந்தது.

1646-ல் பீஜப்பூர் படைகளுக்குப் பணிந்த விஜய ராகவர், அன்று தொடங்கி 1654 வரை தமது ராஜ்ஜி யத்துக்கு வேண்டிய பாதுகாப்புகளைச் செய்துவர லானார். மதுரை நாயக்கர்மேல்தான் அவர் கண்ணாக இருந்தார். தஞ்சைக் கோட்டையை விஸ்தரித்தார்; அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, கீழாநிலை, திருப்பத் தூர், திருக்காட்டுப்பள்ளி, வல்லம், பாந்தனைநல்லூர், சாக்கோட்டை முதலிய இடங்களிலும் புதிய கோட்டைகளைக் கட்டினார். அதே சமயத்தில் மதுரை முத்துவீரப்ப நாயக்கர் தமது திருச்சிராப்பள்ளிக் கோட்டையை வலுவுறச் செய்தார். மதுரை நாயக்க ரிடம் தமக்கு இருந்த துவேஷத்தினால், விஜயராகவர் பீஜப்பூர் சுல்தானிடம் உதவியும் கோரினார். அவன் செவி சாய்க்கவில்லை. ஆனால் சிறிது காலங் கழித்து ஒற்றுமையற்ற தென்னாட்டு நாயக்கர்களை அடக்க

அதுதான் தக்க சமயம் என்று கருதிய பீஜப்பூர் சுல்தான், ஷாஹஜி, முல்லா என்ற இரு தளகர்த்தர்களின் தலைமையில் ஒரு பெரும் படையைத் தெற்கே அனுப்பிவைத்தான். படைகள் திருச்சியை நோக்கி விரைந்தன. அங்கிருந்த மும்முரமான முஸ்தீப்பைக் கண்டு பின்வாங்கி, முல்லா எதிர்பாராத விதமாய் தஞ்சையைத் திடீரெனத் தாக்கினுன். விஜயராகவர் மனமொடிந்துபோய் எதிர்த்து நின்று போராடாமல் தஞ்சைக் கோட்டையைத் தமது மாப்பிள்ளையிடம் விட்டுவிட்டுத் தாம் வல்லம் கோட்டைக்கு ஓடிவிட்டார். அவன் வெகு துணிச்சலுடன் கோட்டை மதிலின்மேல் ஏறி வந்தான். எதிரியின் அம்பு ஒன்று அவன்மேல் பாய்ந்து காயப்படுத்தியது. அவன் உடனே பின்வாங்கினுன். அவன் படைகளும் தைரியத்தை இழந்தன. முகம்மதியப் படைகள் தஞ்சைக் கோட்டையைச் சிறிதும் சிரமமின்றிப் பற்றிக்கொண்டன. அதன்பின்னர் மன்னுர்குடியும் எளிதில் அவர்களுடைய வசமாயிற்று.

தஞ்சை நாயக்கர் வல்லத்தில் இருப்பதையறிந்த பீஜப்பூர் படைகள் அவ்விடத்தை நோக்கித் திரும்பின அதற்குள் விஜயராகவர் தம் கீழ் சிற்றரசனுன தலவராயனது காட்டுக்குள் ஓடி ஒளிந்துகொண்டார். வல்லம் கோட்டை சிறந்த முஸ்தீப்பைக் கொண்டது. விஜயராகவர் மட்டும் எதிர்த்து நின்று போராடியிருந்தால் முடிவு வேருக இருந்திருக்கவும் கூடும். அவர் எதிர்த்து நிற்கத் தைரியமின்றி, தம் மக்கள் நலனை மறந்து, தமது பாதுகாப்பையே முக்கியமாகக் கருதி ஓடிவிட்டதால், படை காவலனும் படையின

ரும் இரவில் ஒருவர் பின் ஒருவராய் அகப்பட்டதை அள்ளிக்கொண்டு ஓடிவிட்டனர். அதற்குப்பின் சுற்றுப் பிரதேசங்களைச் சேர்ந்த கள்ளர்கள், முகமதியர் படை அங்கு வருமுன் கோட்டையைச் சூறையாடி சிறைப்பட்டிருந்தோரை விடுவித்தனர். பிறகு அதை நோக்கி வந்துகொண்டிருந்த படைகளைப் பக்கவாட்டில் மறைந்திருந்து தாக்கி இம்சித்தனர். அதைச் சகித்துக்கொண்டு அவைகள் வல்லத்தை அடைந்ததும், கோட்டை சூனியமாக இருந்ததைக் கண்டு திகைத்துப் போயின. பஞ்சம் தலை காட்டியது. பசிப் பிணியால் படைகள் வாடின. அதைப் பொருத தளபதி முல்லா திருச்சியை நோக்கிச் சென்று அதைத் தீவிரமாகத் தாக்கினன். திருச்சிக் கோட்டையுள்ளிருந்து தளவாய் லிங்கம நாயக்கர் வெகு தீவிரமாக எதிர்த்துப் போராடினர். இருப்பினும் மதுரை நாயக்கர் சண்டையை வளரவிடாது ஒரு சமாதானத்துக்கு வர எண்ணினர். கிடைத்தது போதுமென்று கருதிய முல்லா அவர் கொடுத்த பணத்தை வாங்கிக்கொண்டு திரும்பினன். ஷாஹஜி பீஜப்பூரைச் சேர்ந்த கர்னடக பிரதேசத்தின் கவர்னர் ஆனர். இவர்தாம் சத்ரபதி சிவாஜியின் தகப்பனர்.

நான்காவது தடவையாக பீஜப்பூர் படைகள் விஜயராகவரைத் தாக்குகையில், மக்கள் அவரையும் அவரது ஒளிந்து விளையாடும் போக்கையும் சிறிதும் விரும்பவில்லை. விஜயராகவர் தமது பணிந்துபோகும் வழக்கத்தைத் தொடர்ந்து கையாள வழியின்றி, தமது ஆட்களுடனும் பணத்துடனும் இடம் விட்டு இடம் நகர்ந்து போய்க்கொண்டே இருந்தார்.

அக்காலத்தில் அவரது அளவு கடந்த பக்தியும் கடவுள் நம்பிக்கையுமே அவருக்கு ஆறுதல் அளித்தன. சில காலத்துக்கெல்லாம் முல்லா தம் ஊர் திரும்பியதும், விஜயராகவரும் தஞ்சைக்குத் திரும்பினர். அவர்பால் இரக்கங்கொண்ட கள்ளர்கள், வல்லத்தில் தாம் சூறையாடிய பொருள்களில் ஒரு பகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுத்தனர். விஜயராகவரும் அவர்களுடைய உதவியுடன், தம் இராஜ்யத்தை மீண்டும் ஒழுங்குபடுத்த முயன்றார். ஆனால் அவருக்கு அமைதியாகக் காலந்தள்ளப் பாக்கியம் இல்லை.

மதுரையில் திறமை மிக்க சொக்கநாதர் 1659-ல் பட்டம் ஏற்றார். செஞ்சியிலிருந்த கவர்னர் ஷாஹஜியை எதிர்க்கச் சென்ற மதுரைத் தளபதி லிங்கம நாயக்கன் துரோகமிழைத்து ஷாஹஜியுடன் கூடிக் கொண்டு மதுரைமேல் படையெடுத்து வந்து திருச்சியைத் தாக்கினன். மதுரையுடன் நெடுநாள் பகைமை கொண்ட தஞ்சை நாயக்கர் லிங்கமனுக்கு உதவியளித்தார். ஷாஹஜியும் லிங்கமனும் தோல்வியுற்றுத் தஞ்சைக்குப் பின்வாங்கினர். சொக்கநாதர் உடனடியாக, லிங்கமனுக்கு உதவிய தஞ்சை நாயக்கரைத் தண்டிக்க எண்ணித் தஞ்சையைத் தாக்கினர். தஞ்சை தோற்றது. தஞ்சை இராஜதானி ஏற்பட்டது முதல் தஞ்சை நாயக்கர் முதன்முதலாக மதுரைக்குப் பணிய நேரிட்டது இப்போதுதான். கடுமையான உடன்படிக்கையும் ஏற்பட்டது.

1663-ல் பீஜப்பூர் படைவீரனை வானமியான் திருச்சிமீது படையெடுத்து வந்தபோது, மதுரையுடன் தாம் செய்துகொண்ட உடன்படிக்கையை

மீறி விஜயராகவர் பீஜப்பூர் படைகளுக்கு உணவுப் பொருள்களை உதவினார். சொக்கநாதர் புத்திசாலித் தனமாக வானுமியானுடன் சமாதானம் செய்து கொண்டு, பிறகு காலந் தாழ்த்தாது தஞ்சைப் பிர தேசத்துள் நுழைந்து வல்லம் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார். விஜயராகவர் வேறு வழியின்றி மதுரை நாயக்கருக்குப் பணிந்தார்; அவருடைய நிபந்தனைகளை ஏற்றார். நாயக்கர்கள் ஆட்சியின் ஆரம்பத்தில் தஞ்சைப் பிரதேசத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட வல்லம் கோட்டையை விஜயராகவர் பறிகொடுத்தார்.

ஆனால் சொக்கநாத நாயக்கர் ராமநாதபுரம் சேதுபதிகளுடன் ஈடுபட்டிருந்ததாலும், மைசூர் மன்ன னுக்கு எதிராக ஆயத்தம் செய்து கொண்டிருந்தபடி யாலும், மேலும் டச்சுக்காரர்கள் அவருக்கு உதவி செய்ய மறுத்துவிட்டதாலும், தஞ்சை நாயக்கர் பறி போன வல்லத்தையும் மற்ற இடங்களையும் மீண்டும் கைப்பற்றிக்கொள்ள முடிந்தது. ஆனால் சொக்கநாதர் மட்டும் தஞ்சைமேல் கண்ணாகவே இருந்தார். 1664 முதல் 1673 வரை தஞ்சையும் மதுரையும் அமைதியாகவே இருந்தன.

1673-ல் சொக்கநாதர் திடீரென்று தஞ்சையைத் தாக்கினார். விஜயராகவர் தமது மகளைச் சொக்க நாதருக்கு மணஞ்செய்து கொடுக்க மறுத்ததே அதற் குக் காரணம் என்று கூறும் வரலாறு ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல. தஞ்சை நாயக்கர்களின் மூல புருஷரான சேவப்பரும், மதுரை நாயக்கர்

களின் மூல புருஷரான நாகமரும் விஜயநகரத்து மன்னரிடம் தளபதியாக இருந்தவர்களே. எனவே தகுதியில் ஒருவருக்கொருவர் இளைத்தவரல்லர். மேலும் இருவரும் நாயக்கர்களே. ஆகவே மணக் கலப்புக்கு, தகுதி குலம் பற்றிய ஆட்சேபணை ஒன்றும் இருக்க இடமில்லை. சொக்கநாதர் விஜயராகவரின் மகளை மணக்க, போர் நிகழ்த்தத் தேவையுமில்லை. விஜயராகவர் சாம்ராஜ்ய விசுவாசம் நிரம்பியவர்; சுயேச்சையை விரும்பிய மதுரை நாயக்கருக்கு என்றும் எதிர்க் கட்சியில் நிற்பவர். சமீபத்தில் மதுரையுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறினவர்; மேலும், கப்பமும் கட்டவில்லை. மதுரை நாயக்கருடைய இதர இடைஞ்சல்களைப் பயன் படுத்திக்கொண்டு விஜயராகவர் வல்லம் முதலிய இடங்களை மீட்டிக் கொண்டுள்ளார். மதுரை நாயக்கருக்கு ஆத்திரமூட்ட இத்தனையும் போதாவா? வேறு உடனடியான காரணம் யாதாயிருக்கலாம் என்பது திட்டமாகத் தெரியவில்லை.

1673-ல் மதுரை நாயக்கரின் படைகள் தளபதி வெங்கடகிருஷ்ணப்பரின் கீழ், திருச்சியிலிருந்து புறப்பட்டுத் தஞ்சைப் பிரதேசத்துக்குள் பாய்ந்தன. படைகளுடன் பேஷ்கார் சின்னத்தம்பி பிள்ளையும் வந்தார்; கன்னிவாடி நாயக்கரான சின்னக் கதிரி நாயக்கரும் தம் உதவிப் படையுடன் கூடவே வந்தார். மதுரைப் படைகள் முன்னணிக் கோட்டை யான வல்லத்தைக் கைப்பற்றிக் கொண்டபின், தஞ்சையை நோக்கி வந்தன. பீஜப்பூர் படைகளுடன் ஒளிந்து விளையாடும் விஜயராகவருக்கு இப்போது

என்ன செய்வது என்று விளங்கவில்லை. மதுரை நாயக்கருக்குப் பணங் கொடுத்துச் சமாதானம் செய்து கொள்ளவும் முடியாது. தாமும் யுத்தத்துக்கு முஸ்தீட்புகள் செய்யவில்லை. இந்த நிலைமையில் தஞ்சையை எதிரிப்படைகள் நெருங்குகின்றன என்பதை அறிந்ததும் விஜயராகவர் தமது பூஜையைவிட்டு அகன்றபாடில்லை. தம் இறுதிக் காலம் நெருங்குவதை உணர்ந்தார்போலும்! அதுவரை சிறையில் கிடந்த தம் இளங் குமாரன் மன்னருவை விடுதலை செய்து அவசரம் அவசரமாகப் படையைத் திரட்டினர். தளபதிகள் போருக்குக் கிளம்பினர். காலம் தவறி விட்டது. தஞ்சைக் கருகில் நிகழ்ந்த கடும்போரில் தஞ்சைத் தளபதி வெங்கடாத்திரி நாயக்கரும் சேனையில் பெரும் பகுதியினரும் மடிந்தனர். தஞ்சைக் கோட்டையை எதிரிகள் அணுகியதும் விஜயராகவரும் அவர் மகனும் வீராவேசத்துடன் போரிட்டுக் களத்திலேயே மாண்டனர். தஞ்சைக் கட்சி தோற்றது; தஞ்சை, மதுரை நாயக்கர் வசமாயிற்று. முன்னேற்பாட்டின்படி, விஜயராகவர் குடும்பத்துப் பெண்மணிகள் வெடிமருந்துக்கு இரையாயினர். விஜயநகர சாம்ராஜ்யத்தின் ஆணி வேர் அற்றது. சொக்கநாதர் தமது வளர்ப்புச் சகோதரனை அளகிரி நாயக்கரைத் தமது பிரதிநிதியாகத் தஞ்சையில் ஆண்டுவருமாறு அமர்த்தினர்.

விஜயராகவர் ஆட்சியில் நிர்வாகம் நிலைகுலைந்து விட்டது என்பது வெள்ளிடைமலை. அவர் வீரர்தான்; ஆனல் சுக போகத்திலும் அளவுகடந்த பக்தியிலும் மூழ்கி, நாட்டின் நலனை மறந்தார் என்றே கூற

வேண்டும். முகம்மதியர் படையெடுப்பு இல்லாத காலங்களில் தம்மாலியன்ற பாதுகாப்புகளைச் செய்தார் பதவி மோகத்தினால்தானோ என்னவோ, தமது நீண்ட ஆட்சிக் காலத்தில், தள்ளாத வயதிலும் இளைஞன் மன்னாரு நாயக்கரைப் பொறுப்பேற்க விடாது, மதுரைப் படைகள் தஞ்சையை அணுகும் வரை அவரைச் சிறையினின்றும் விடுவிக்கவில்லை. இதற்கு நாடோடியான கதைகள் கூறும் காரணம் ஒப்புக்கொள்ளத் தகுந்தனவல்ல. 1613-ல் அச்சுதப்பர் காலத்தில் இம்மாதிரி ஒரு நெருக்கடி தோன்றிற்று. அச்சுதப்பர் சற்று தயங்கினார். ஆனால் அப்போது அவரைப் பதவியினின்றும் விலகிக்கொள்ளுமாறு தூண்ட, திறமை வாய்ந்த பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதர் இருந்தார். அத்தகைய பிரதானி ஒருவர் விஜயராகவருக்கு வாய்க்காததுதான் தஞ்சை நாயக்கர்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் ஆகும் என்பது கூறாமலே விளங்கும்.

தம் ஆட்சியின் ஆரம்பத்தில் இருந்த பிரதேசத்தை விஜயராகவர் சிதறவிடாது ஆண்டார். 1642-க்குப் பின்னரே மதுரை நாயக்கருடைய எதிர்ப்பினால் தஞ்சை இராஜ்ஜியம் பாதிக்கப்படலாயிற்று. விஜயராகவரும் தம் முன்னோர்களைப் போலவே, இராஜ்ஜியத்தின் பல பகுதிகளிலும் காரியஸ்தர்களை நியமித்திருந்தார் முடிகொண்டநல்லூரில் காரியம் நயினியப்ப நாயனார், கோயிலில் அன்றாடம் பூசை நடப்பதற்கும் உற்சவங்கள் நடப்பதற்கும் ஏற்பாடு செய்தார். நெடுங்குன்றத்திலும் ஒரு காரியஸ்தர் இருந்தார். இதற்குக் கல்வெட்டுகள் சான்று கூறும்.

தம் முன்னோர்களைப் பின்பற்றியும் விஜயநகர சாம்ராஜ்யத்தின் அடிப்படை நோக்குக்கு இயைந்தும், விஜயராகவர் மதத் துவேஷமில்லாமல் ஆண்டார்; ஆனால் வைஷ்ணவத்துக்குச் சற்று தாராளமாக ஆதர வளித்தார். விஜயராகவர் சிறந்த விஷ்ணு பக்தர். தம் காலத்து வைஷ்ணவப் பெரியாரான குமார தாத்தா சாரியாரிடம் அவர் மிகுந்த பக்தி விசுவாசங் கொண் டிருந்தார்; அவரையே ராஜகுருவாக்கிக் கொண்டார். வருடந்தோறும் டிசம்பர் மாதத்தில் அவரைப் பல்லக் கில் இருத்தி ஊர்வலம் வருவதும் விஜயராகவர் அவர் பாதுகைகளைத் தாங்கி அடிக்கடி பல்லக்கைத் திரும்பிப்பார்த்து தமது குருவை வணங்கிக்கொண்டே செல்வதும் வழக்கம் என்று ஒரு கத்தோலிக்க பாதிரி யாரின் கடிதத்திலிருந்து தெரியவருகிறது. அன்றாடம் ஏராளமான பிராம்மணர்களுக்கு அன்னம் வழங்கப் பட்டது என்று வரலாற்றுக் கதைகள் கூறும். விஜய ராகவர் ஒரு நாளாவது ஸ்ரீரெங்கநாதரைத் தெரி சிக்காமல் இருந்ததில்லை என்றும், யுத்த நெருக்கடி தோன்றிய காலங்களிலும்கூட, தஞ்சையிலுள்ள ஒரு உயர்ந்த கோபுரத்தின்மீதேறி நின்று ஸ்ரீரெங்கத்தைத் தரிசித்த பின்னரே அவர் உணவு கொள்வது வழக்கம் என்றும் சொல்லப்படுகிறது.

விஜயராகவரை மன்னாருதாஸர் என்று அழைப் பதும் உண்டு. மன்னார்குடி ராஜகோபாலஸ்வாமிதான் அவரது குல தெய்வம். அவருக்கு விஜயராகவர் இரத்தினங்கள் இழைத்த தங்கக் கவசம் ஒன்று செய்து அளித்தார். அந்தக் கோயிலின் பிரகாரங் களையும், நந்தவனத்தையும், திருக்குளத்தையும் அவர்

கட்டினர். தஞ்சையிலுள்ள இராஜ கோபாலஸ்வாமி கோயிலும் விஜயராகவர் கட்டியதே. விஜயராகவர் பரம வைஷ்ணவராயினும் சிவன் கோயில்களுக்கும் பல மண்டபங்கள் கட்டியிருக்கிறார். அவருக்குப் பல மனைவியர் உண்டு.

விஜயராகவர் புலவர்களையும் கல்விமான்களையும் நிரம்ப ஆதரித்தார். அவர் ஆட்சியில் தெலுங்கும் வடமொழியும் அபிவிருத்தியடைந்த போதிலும், அவர் காலத்தில்தான் தென் நாட்டுத் தெலுங்கு இலக்கியம் மேலோங்கி நின்றது. அவரது சபையில் சிறந்த புலவர்களும் புலவிகளும்கூட ஆதரிக்கப்பட்டனர். விஜயராகவ சரித்திரம் எழுதிய காமராஜு வேங்கடபதி சோமயாஜியும், இராஜகோபால விலாசம் எழுதிய செங்கலவால காளாகவியும், அன்னதான நாடகம் எழுதிய புருஷோத்தம தீட்சிதரும் அவர் காலத்தவரே. சங்கீதம், சாகித்தியம் இரண்டிலும் நிபுணரான க்ஷேத்ரக்ஞரும் விஜயராகவர் சபையை அலங்கரித்தவரே. இளவரசன் மன்னருதாஸரும் சிறந்த புலமை வாய்ந்தவர்; அவர் விஜயராகவ அப்யுதயம் என்ற காவியத்தையும் ஹேமாப்ஜ நாயக ஸ்வயம்வர நாடகத்தையும் இயற்றியுள்ளார். புலவிகளுள் ரெங்கஜம்மா சிறப்புற்று விளங்கினள்; அவள் தன்னை விஜயராகவரின் மனைவியென்றே குறிப்பிட்டிருக்கிறாள். அவள் ஒரே மூச்சில் நூறு செய்யுள்களை இயற்றும் திறமை வாய்ந்தவள்; சதலேகினி என்ற பட்டம் பெற்றவள்; மன்னருதாஸ விலாசம், இராமாயண சாரம், பாகவத சாரம் முதலிய காவியங்களை அவள் இயற்றியிருக்கிறாள்.

அவளது புலமையை மெச்சி, விஜயராகவர் அவளுக்கு கனகாபிஷேகம் செய்தாராம்.

விஜயராகவர் மேலும் மேலும் தெலுங்கு மொழியையே ஆதரித்தபோதிலும், சம்ஸ்கிருதமும் அவருடைய ஆதரவைப் பெற்றது. சங்கீத விற்பன்னரான வேங்கடமகி விஜயராகவர் காலத்தில்தான் தமது பிரசித்திபெற்ற சதுர்தண்டிப் பிரகாசிகை என்ற இசை நூலை இயற்றினர்.

விஜயராகவர் தாமே சிறந்த கல்விமானும் கவியும் ஆவார். அவருக்குச் சாஹித்ய ராய என்ற விருதுப் பெயர் உண்டு; அதற்குச் சின்னமாக இடது காலில் ஒரு சிலம்பை அணிந்து, கலைத் தெய்வமான ஸ்ரீ சாரதாவின் உருவம் தீட்டிய கொடியையும் அவர் பிடித்துக்கொள்வதுண்டு என்று ஒரு வரலாற்று நூல் கூறுகிறது. விஜயராகவருக்கு சாஹித்ய போஜன் சங்கீத வேத்தி, லட்ச விப்ர அன்னதாநா என்ற விருதுப் பெயர்களும் வழங்கின.

விஜயராகவர் நாடகத்துறையில் மிகுந்த சிரத்தை கொண்டவர் என்று எல்லா நூல்களும் கூறுகின்றன, அவரது அரண்மனைக்குள்ளேயே ஒரு நாடக அரங்கு இருந்தது என்றும், அங்கு அவர் முன்னிலையில் நாடகங்கள் நடிக்கப் பெறுவதுண்டு என்றும் தெரிகிறது. தெலுங்கு இலக்கியத் துறையில், நாடகக் கலைக்குச் செய்யப்பட்ட சேவையே முன்னணியில் நிற்கிறது. அல்லாசளி பெத்தண்ணுவால் ஆரம்பிக்கப் பெற்ற தெலுங்குப் பிரபந்த வகை விஜயராகவர் காலத்தில்தான் மேலோங்கி வளர்ந்தது என்று கருதப்படுகிறது.

உள் நாட்டு வரலாறுகள் அனைத்தும் விஜயராகவர் இலக்கியத் துறைக்குச் செய்த உதவியையும், மக்கள் அவரது பக்தியையும் தரும சிந்தனையையும் மதித்து அவரிடம் அன்பும் மரியாதையும் செலுத்தியதையும் மட்டும் புகழ்ந்து கூறுகின்றன. வெளி நாட்டவரான கத்தோலிக்க பாதிரியார்களின் கடிதங்கள், அவருடைய காலத்தின் பிற்பகுதியில் தோன்றிய சச்சரவையும் சண்டைகளையும் கூறுவதுடன், அவர் தைரியமற்ற கோழையென்றும் ஆளும் திறமையற்றவரென்றும் மக்களைக் காப்பாற்றும் கடமையை அவர் சரிவரச் செய்யவில்லையென்றும் எடுத்துக் கூறுகின்றன. அவருடைய ஆட்சியில் மக்கள் அடிக்கடி திரள் திரளாக நாட்டைவிட்டு வெளியேறி, மதுரை, மைசூர் போன்ற பிரதேசங்களுக்குச் சென்றது அவரது காலத்து நிர்வாக ஊழலை வெளிப்படுத்துகிறது. மக்களுக்கோ அதிகாரத்தொடர்பு கிடையாது. விஜயராகவர் மக்களை எதிரிகளின் படையெடுப்பினின்றும் காக்கத் தவறியதுடன், அவருடைய பிரதானி மக்களிடம் பளுவான வரி வசூலிக்கத் தொடங்கினான். எனவே மக்கள் நாயக்கரிடம் வெறுப்புக் கொண்டனர்; வியாபாரிகள் வியாபார நிறுத்தம் செய்தனர்; கைத்தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். பீஜப்பூர் முகம்மதியப் படைகளுக்குச் செலுத்த நேரிட்ட பெருத்த கப்பத் தொகைகளே இதற்குக் காரணமாக இருக்கலாம். இருப்பினும் மக்களுடைய அதிருப்தியை மதித்து 1666-ல் விஜயராகவர் தமது பிரதானியை மக்களுடைய சீற்றத்துக்குப் பலியாக்கினார். விஜயராகவருடைய தைரியக்

குறைவும், திறமையற்ற போக்கும், பொதுநலத்தைக் கருதாது பக்தித் துறையில் அழுந்திக் கிடந்ததும் அவருடைய வீழ்ச்சியைத் துரிதப் படுத்தின. தஞ்சை நாயக்கர்களுள் கடைசியானவராக வைத்து எண்ணத் தக்கவர் விஜயராகவரே ஆவர். 1532-ல் விஜய நகர மன்னருடைய ஒரு மூச்சில் தோற்றுவிக்கப்பட்ட தஞ்சை ராஜ்ஜியம், ஒரே மூச்சில் மதுரை நாயக்கரா லேயே வீழ்த்தப்பட்டது. விதியின் போக்கை யார் தான் முன்கூட்டியே அறியக்கூடும்?

7

செங்கமலதாஸு (1674 - 75)

அளகிரி நாயக்கர் ஆரம்பத்திலிருந்தே சொக்க நாதருக்கு அடங்கி நடக்கவில்லை. பதவிக்கு வந்து ஒரு வருஷம் ஆவதற்குள்ளாகவே அவர் சுயேச்சை யாக நடந்துகொள்ளத் தொடங்கினர். மதுரைக்குச் செலுத்தவேண்டிய கப்பத்தைக் கட்டாததுடன், கடிதப் போக்குவரத்தில் சொக்கநாதருடன் சம அந் தஸ்து கொண்டாடினர். இருப்பினும் சொக்கநாதர் அவரிடம் கொண்டிருந்த அன்பினல் அதை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. விஜயராகவரிடம் ராயஸ வேலை பார்த்த வெங்கண்ணு என்னும் தெலுங்கு நியோகிப் பிராம்மணர் அளகிரியிடமும் தொடர்ந்து வேலை பார்த்து வரலானர். அவருடைய தூண்டுதலினல்தான் அளகிரி நாயக்கர் சுயேச்சையாக நடந்துகொண்டார் என்று தெரிகிறது. ஆனல் வெங்கண்ணுவுக்கு உள்ளூர அதிருப்தியே இருந்து வந்தது.

இதனிடையில் போரில் இறந்துபட்ட மன்னரு தாஸரின் இளங் குமரனை செங்கமலதாஸு என்பான் ஒரு தாதியால் காப்பாற்றி அப்புறப்படுத்தப் பட்டு, நாகப்பட்டினத்தில் ஒரு செட்டியாருடைய ஆதரவில் மறைந்து வளர்ந்து வருவதாகக் கேள்வியுற்ற வெங்கண்ணு அந்த இளைஞனைப் பட்டத்தில் அமர்த்த சூழ்ச்சி செய்யலானார். அத்தகைய புரட்சிக்கு மக்களையும் தயார் செய்தார். பீஜப்பூர் சமஸ்தான சுல்தானிடம் சென்று அதற்கு உதவியளிக்க வேண்டினார். சுல்தானும் அதற்கு இணங்கி, தனக்குக் கீழ்ப்பட்ட கர்னாடகப் பிரதேசத்தின் பிரதிநிதியாகப் பெங்களூரிலிருந்து ஆட்சி செலுத்திய (சிவாஜி மன்னரின் தம்பி) வெங்காஜி தலைமையில் ஒரு படையைத் தஞ்சைக்கு அனுப்பி வைத்தான். அளகிரி நாயக்கர் அதைக் கேள்வியுற்று மதுரை நாயக்கர் சொக்கநாதருடைய உதவிக்கு மன்றாடினார். சொக்கநாதர் ஒன்றுக்கும் அசையவில்லை. பெங்களூரிலிருந்து வரும் வழியில் ஆரணியைக் கைப்பற்றிக்கொண்டு, பின்னர் தஞ்சையை நோக்கி வந்துகொண்டிருந்த வெங்காஜியின் படையை அளகிரி அய்யம்பேட்டையில் எதிர்த்துப் போர் புரிந்தான். ஆனால் தோல்வியுற்று, அரியலூர் வழியாக மைசூருக்கு ஓடிவிட்டான். வெங்காஜி தஞ்சைக்கு வந்து செங்கமலதாஸுவைப் பட்டத்தில் அமர்த்தினார். செங்கமலதாஸு அவருக்கு ஏராளமான வெகுமதிகளை அளித்ததுமன்றி, யுத்தச் செலவுகளுக்காக கும்பகோணம், மன்னார்குடி, பாபநாசம் இம் மூன்று பகுதிகளின் வருமானத்தையும் அளித்தார்.

செங்கமலதாஸு நெடுநாள் ஆட்சி செலுத்தும் பாக்கியத்தைப் பெறவில்லை. வெங்காஜியும் என்ன எண்ணத்துடனே கும்பகோணத்திலேயே சிறிது காலம் தங்கி நின்றார். செங்கமலதாஸு தன்னை வளர்த்த செட்டியாரையே தமக்குப் பிரதானியாக அமர்த்திக்கொள்ளுமாறு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பிரதானியே தளவாயாகவும் இருந்தார். ராயஸம் வெங்கண்ணு தாம் பட்ட பாடெல்லாம் வீணாயிற்றே, தமக்குத் தளவாய்ப் பதவி கிட்டாமல் போயிற்றே என்று அருவருப்புக் கொண்டார். செங்கமலதாஸுவின் ஆட்களுக்குள்ளேயே ஒற்றுமை இல்லாதிருந்தது வெங்காஜியின் பதவி மோகத்தைத் தூண்டிவிட்டது.

பீஜப்பூர் சுல்தான் இறந்த பின் வெங்கண்ணு வெங்காஜியைத் தூண்டித் தஞ்சையைக் கைப்பற்றிக் கொள்ளச் செய்தார் என்னும் கதைக்கு ஆதாரமில்லை; ஏனென்றால் அச்சமயம் பீஜப்பூர் சுல்தான் ஒருவரும் இறக்கவில்லை. வெங்காஜிதான் பதவி ஆசைகொண்டு சமயம் பார்த்திருந்து செங்கமலதாஸுவை விரட்டி விட்டு, தஞ்சையை அபகரித்துக்கொண்டார் என்பது திடமாகிறது. செங்கமலதாஸுவுக்கு உதவியாக, ராமநாதபுரம் திருமலை சேதுபதியின் மருமகனான ராஜசூரியன் என்பவனும் அவனுடன் இருந்தான் என்று தெரிகிறது. இருப்பினும் வெங்காஜியின் படைகளுக்கு எதிர் நிற்கமாட்டாது செங்கமலதாஸு அரியலூருக்கு ஓடிவிட்டான். தஞ்சை மிகவும் இலகுவாக மகாராஷ்டிர வீரன் வெங்காஜி கையில் சிக்கியது. செங்கமலதாஸு எளிதாக அடைந்த பட்டத்தை

எளிதில் இழந்தான். தஞ்சையில் நாயக்கர்கள் ஆட்சி மறைந்தது.

1675-ம் வருஷம் பிப்ரவரி மீ 7-ம் தேதி மகாராஷ்டிரர்கள் ஆட்சி தஞ்சையில் ஸ்தாபிக்கப் பெற்றது. பின்னர் மகாராஷ்டிரர் ஆட்சிக் காலத்தில், மைசூர் தளபதி குமரய்யா, செங்கமலதாஸுவை மீண்டும் பட்டத்தில் அமர்த்தச்செய்த முயற்சியும் மதுரை, நாயக்கர் ஒத்துழையாததால் தோல்வியுற்றது. செங்கமலதாஸுவின் பிற்கால வாழ்க்கையைப்பற்றிப் பல வரலாறுகள் வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று, செங்கமலதாஸு மதுரை இராஜ்ஜியத்தில் ஒரு ஜாகீர் தாராக இருந்ததாகக் கூறும்.

ஹிந்து மதப் புரவலர்களான விஜயநகர மன்னர்களின் ஆதரவுடன் தோன்றி, மன்னர்களுக்கு இடையறாத ஆதரவு அளித்த தஞ்சை இராஜதானி, அந்த சாம்ராஜ்ய விசுவாசத்தின் விளைவாகவே மதுரை, செஞ்சி நாயக்கர்களுடைய பகைமைக்கு ஆளாகி சாம்ராஜ்யம் சிதைவுற்று அழிந்த சிறிது காலத்துக்கெல்லாம் தானும் மறைந்து ஒழிந்தது, நாயக்கர்களின் நூற்றுநாற்பது வருஷ கால ஆட்சிக்குப் பின் தஞ்சை மகாராஷ்டிர மன்னர்களின் கீழ் சென்றது. மகாராஷ்டிர மன்னர்களும், 1675 முதல் இரண்டாம் சரபோஜி மன்னன் 1799-ல் தம் ஆட்சியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிட்டு உதவிச் சம்பளம் பெற்று விலகி நிற்கும் வரை, தஞ்சையைத் தனி அரசர்களாக ஆண்டனர் என்று மட்டும் இங்கு குறிப்பிடுதல் போதுமானது.

8

நாயக்கர்கள் காலத்து ஆட்சிமுறை

விஜயநகர மன்னரால் ஸ்தாபிக்கப்பட்ட தஞ்சை இராஜதானி நாயக்கர்கள், ராயர்களுக்கு அடங்கிய வர்களே. இன்றைய கவர்னர்களுக்குச் சமமான அந்தஸ்தை நாயக்கர்கள் வகித்தனர். மேலும் அவர்கள் ஆண்ட பகுதிகள், சாம்ராஜ்யத்தின் ராணுவ மானியங் களாகும். இன்றைய கவர்னர்களைப்போல் ஒரு குறிப் பிட்ட காலத்துக்கு நியமிக்கப்படுவதும், சம்பளம் பெறுவதும் அக்காலத்தில் வழக்கத்திலில்லை. ராயர் களிடம் விஸ்வாசமாக நடந்துகொள்ளும் வரை, நாயக்கர்கள் தலைமுறை தலைமுறையாகத் தம் பகுதி களை ஆண்டு வரலாயினர். ராயர்களுக்குக் கப்பம் கட்டுவதும், தேவையானபோது தம் உதவிப்படையை அனுப்பி அவரைத் தாங்கி நிற்பதுமே அவர்கள் பொறுப்பாக இருந்தது. மற்ற உள்நாட்டு விவகாரங் களில் நாயக்கர்கள் பூரண அதிகாரம் செலுத்தினர். பெரும்பாலும் தங்கள் நன்கொடைகளிலும் கல் வெட்டுக்களிலும் தம் காலத்திய மன்னரின் பெய ரையும் காலத்தையுமே பொறித்தனர். மதுரை, செஞ்சிப் பகுதிகளைப் போலன்றி, தஞ்சை நாயக்கர்கள் சாம்ராஜ்யத்துக்குத் தூண்போல நின்று உதவினர்.

ஹிந்து தர்ம சாஸ்திரங்களின்படி, நாடாள்பவர் கடவுளின் அம்சமாவர். மக்களின் நலனை அவர் பாது காக்கக் கடமைப்பட்டவர் எனினும் அவர் பூரண அதிகாரம் உள்ளவர். நடைமுறையில் அரசனை மக்கள் தேர்ந்தெடுப்பது என்ற வழக்கமே கிடையாது.

சேவப்பரை அச்சுத ராயர் தஞ்சையில் நாயக்கராக நியமித்த அன்றே, ஒரு பரம்பரை ஆட்சி ஸ்தாபிதமாயிற்று எனலாம். ராயர்களின் பிரதிநிதியாக இருந்து, தஞ்சை நாயக்கர்கள் ஆண்டுவரலாயினர். சாம்ராஜ்யத்துக்கு வெளியே இருந்த ராஜ்யங்களுடன் நாயக்கர்களுக்கு நேரடியான தொடர்பு கிடையாது. இதுதான் சாம்ராஜ்ய ஆட்சிக் கொள்கை.

தத்தம் இராஜதானியில் நாயக்கர்கள் பூரண அதிகாரம் செலுத்தினர். அவர்களுக்கு மேலதிகாரி இல்லை. கடவுளின் அம்சமாகவே கருதப்பட்ட அரசனிடம் மக்கள் அடக்கமும் அன்பும் கொண்டு ஒழுகினர். மேலும் அவர்களைக் கட்டுப்படுத்த் மந்திரிகள் சபையோ, சட்டசபைகளோ அக்காலத்தில் இல்லை. இருப்பினும் நாயக்கர்கள் ஆட்சியை யதேச்சாதிகாரம் என்று சொல்வதற்கில்லை. ஹிந்து வழக்கப்படி, தர்ம சாஸ்திரங்களின் விதிகளுக்கு அடங்கி, ராஜ நீதி, தண்ட நீதி இவற்றை அநுசரித்து, சிஷ்டர்களின் ஆசாரத்தையும் (அறிவாளிகளின் போக்கு) ஒட்டி, ஆட்சி முறையில் நியாயம் வழங்கப்பெற்றது. ஹிந்து தர்மத்தை வளர்க்கத் தோன்றிய சாம்ராஜ்யத்தில் ஹிந்து சம்பிரதாயப்படியே ஆட்சி முறை அமைந்தது. அந்தந்த அரசர்களின் தனித் திறமையைப் பொறுத்து அவரவர் ஆட்சி சிறப்புற்றது. ஒரு அரசன் மக்களைப் துன்புறுத்தினன் என்றால், அவனிடமே தமது குறைகளைச் சொல்லி முறையிடுவதைத் தவிர மக்களுக்கு வேறு புகலில்லை. மன்னன் தவறிழையான் என்பதே அடிப்படைக் கொள்கை. மன்னனை எதிர்த்துக் கலகம் செய்வது என்ற

எண்ணமே ஹிந்து தர்மத்துக்குப் புறம்பானது. துஷ்ட அரசன் காலத்தில் மக்கள் நாட்டைவிட்டு வேறிடம் செல்வதும், மக்களின் அன்பைப் பெற்ற அரசன் காலத்தில் வெளியிடங்களிலிருந்தும் மக்கள் நாட்டில் குடியேறி வாழ்வதும் சாமானிய நிகழ்ச்சிகளே. விஜயராகவர் காலத்தில் நடைபெற்ற மக்களின் வெளியேற்றம் இத்தன்மையதே ஆகும்.

அரசனது காலத்திலேயே அரச குமாரனை இளவரசுப் பட்டம் கட்டுவித்துத் தக்க கல்வியும் நிர்வாகப் பயிற்சியும் அவருக்கு அளிப்பது வழக்கம். வயது சென்ற மன்னர்கள் நிர்வாகத்தை இளவரசனிடம் விடுவதும், சில சமயங்களில் இளவரசனைத் துணையாகக் கொண்டு ராஜ்ஜியத்தை நிர்வகிப்பதும் உண்டு.

மதுரை நாயக்கர்களைப் போலன்றி, தஞ்சை நாயக்கர்கள் தம் கீழ், குறுநில மன்னர்களை ஆட்சி செலுத்த விடவில்லை. ஆங்காங்கு தக்க அதிகாரங்களுடன் நாயக்கரின் காரியஸ்தர்கள், தத்தம் அதிகார எல்லையில் நிர்வாகத்தை நடத்தினர். தஞ்சைப் பகுதிக்குள் இறுதிவரை அமைதியும் ஒற்றுமையும் நிலவியதற்கு இது ஒரு காரணமாகும்.

நாயக்கர்களின் ஆட்சியில், பிரதம மந்திரியை முதல்வராகக் கொண்ட அதிகாரிகளே நிர்வாகத்தை நடத்தி வரலாயினர். மந்திரி (சசிவ) தான் ஹிந்து முறைப்படி முக்கிய அதிகாரங்களை வகிப்பவர். மிகுந்த கல்வியறிவும், சீலமும், திறமையும் கொண்டவரையே மந்திரியாகக் கொள்வது வழக்கம். திறமையுள்ள மந்திரியில்லாத அரசனைத் துதிக்கையற்ற யானைக்கு ஒப்பிடுவதுண்டு. நாயக்கர்களின் கீழ் பல மந்திரிகள்

இருந்தனர். முதல் மந்திரிக்குப் பிரதானி என்று பெயர். பிராம்மணர்களே பிரதம மந்திரியாக இருந்திருக்கின்றனர். அதிகார முறையில் அரசனுக்கு அடுத்தவர் பிரதானியே. அவரே உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களை நிர்வகிப்பதற்குப் பொறுப்பாளி ஆவர். 1613-ல் நாட்டில் தோன்றிய நெருக்கடியில், பிரதம மந்திரி கோவிந்த தீட்சிதர் ஏற்ற பொறுப்பு இதற்குத் தக்க சான்று.

பிரதம மந்திரிக்கு அடுத்தாற்போல், சேனுதிபதி (தளவாய்) முக்கிய பதவி வகிக்கிறுர். உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதும், வெளி அபாயங்களை எதிர்த்து நாட்டைப் பாதுகாப்பதும் தளவாயின் பொறுப்புமிக்க அலுவலாகும். மதுரை நாயக்கர்களின் கீழ், பிரதானியே தளவாயாகவும் இருந்திருக்கிறுர். ஆனால் தஞ்சையில் தளவாய், சேனுதிபதியாக மட்டுமே இருந்தார். தற்பாதுகாப்பு, போர் நடவடிக்கைகள் இவற்றில், தளவாய் அரசனுக்கு யோசனைகள் கூறுவதுண்டு.

பிரதானிக்கும் தளவாய்க்கும் அடுத்தபடியாக முக்கிய அதிகாரம் வகிப்பவர், அரசனின் ராயஸம் அல்லது முக்கிய காரியதரிசி. இவர் சோழர்களின் திருமந்திரவோலைக்குச் சமமான பதவியில் இருப்பவர். ராயஸம் பிரதம நிர்வாக அதிகாரியாயிருப்பினும், பிரதானி, தளவாய் இருவருக்கும் உள்ள பதவி முக்கியத்துவம் அவருக்குக் கிடையாது. ராயஸம் அரசரின் ஆணைகளைப் பதிவு செய்வதும் அவற்றை நிறைவேற்றுவதும் வழக்கம். பாதுகாப்பு நீங்கலாக இதர இலாகாக்களின் நிர்வாகத்தை அவரே மேல் பார்த்து வருபவர்.

பிரதம காரியதரிசிக்குக் கீழ், அதிகாரம் வகிப்பவர் அட்டவணையென்று அழைக்கப்பட்ட சிரஸ்ததார். அவரே வரி விதிப்பு உத்தியோகஸ்தர்களுக்குத் தலைமை வகிப்பவர். வரி விதிப்பு உத்தியோகஸ்தர்கள் ஸம்பிரதிகளும் கணக்கர்களும் ஆவர். ஸம்பிரதிகளின் கீழ், பல கிராமங்களின் கணக்கர்கள் இருந்தனர். அரசாங்க கஜானுவான பண்டாரம், தொளிகானு அதிகாரியின் மேற்பார்வையில் இருந்தது. இவருக்கு மந்திரிகள் சபையில் ஒரு இடமும் அளிக்கப்பட்டது.

நாயக்கர்கள் காலத்தில் சம்பளம் வழங்கும் முறை இருக்கவில்லை. அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப, நிலங்கள் மானியமாக விடப்பட்டன.

ஒற்றர்கள் இலாக்கா ஒன்றும் ஒழுங்காக வேலை செய்து வந்தது என்று யக்ஞநாராயண தீட்சிதர் கூறுகிருர் விஜயநகர மன்னரான முதலாம் வெங்கடபதி ராயர் இறந்த செய்தியைத் தஞ்சைக்கு உடனுக்குடன் தெரிவித்தவர்கள் இந்த ஒற்றரே ஆவர்.

நாயக்கர்கள் ஆட்சியில் அந்நிய நாட்டவர் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர் என்று ஆங்கில வர்த்தகர்களின் குறிப்புகள் கூறும். அவர்கள் வெற்றிலை போடுவது வழக்கமில்லை என்று கண்டு, நாயக்கர்கள் அவர்களுக்கு ஆடைகளை அளித்து உபசரிப்பதுண்டாம். நிகோலஸ் பிமெண்டா எனும் பாதிரியார் நாயக்கர்களின் நியாயமான போக்கைப் புகழ்ந்து கூறுகிருர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பலம் பொருந்திய கோட்டைகள் இருந்தன. வடகிழக்கில்

பந்தனல்லூர் கோட்டையும், தென்மேற்கில் பட்டுக் கோட்டை திருப்பத்தூர் கோட்டைகளும், மேற்கில் வல்லம் கோட்டையும் இருந்தன. வல்லம் கோட்டையே தஞ்சைக்கு முன்னணிப் பாதுகாப்பாக விளங்கியது. ஒவ்வொரு கோட்டையும், பொறுப்பும் நம்பிக்கையும் வாய்ந்த காவலன் கீழ் இருந்தது. கோட்டையில் ஏராளமான உணவுப் பொருள்களும் இதரத் தேவைகளும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. கோட்டைத் தலைவர்கள் அனைவரும் தளவாய்க்குக் கீழ்ப்பட்டவர்களே.

நாயக்கர்கள் சேனையில் கவசந் தரித்த யானைப் படை, குதிரைப்படை, காலாட்படைகள் இருந்தன. படைவீரர்கள் உருக்குக் கவசமும் தலையணியும் அணிவதுண்டு. யானைகள்மீது உருக்கினால் செய்த அம்பாரிகள் கட்டப்பட்டன. வில், வாள், அம்பு, பட்டாக் கத்தி இவற்றுடன் துப்பாக்கிகளும் (அக்னி யந்திரம்) கையாளப்பட்டன. ஒரு ஒட்டகைப் படையும் இருந்ததாகத் தெரிகிறது. நாயக்கர்கள் சேனையில் அந்நிய நாட்டவர்களும் (பராசிகர்கள்) சிங்களரும் (யவனர்) இருந்தனர்.

நாயக்கர்கள் காலத்தில் கப்பற்படை ஒன்றிருந்ததா என்று திட்டமாத் தெரியவில்லை. அந்நிய நாட்டவர் குறிப்புகளில் தோணிகளைப்பற்றிக் கூறியுள்ளதாலும், தஞ்சை நாயக்கர்களும் கடல் தாண்டிச் சென்று யாழ்ப்பாண மன்னனுக்கு உதவியிருப்பதாலும், போர் வீரர்களும் துப்பாக்கிச் சாதனமும் உள்ள சிறு கப்பல்கள் அவர்கள் காலத்தில் வழங்கின என்பது தெளிவாகிறது.

நிர்வாக வசதியைக் கருதி, தஞ்சை ராஜதானி பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாடும் பல மாகாணங்களாக (சீமை) பிரிக்கப்பட்டிருந்தது. பல கிராமங்கள்தான் நிர்வாக அமைப்பின் அடிப்படையாய் அமைந்தன. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு நாட்டாண்மைக்காரனும் கணக்கனும் தலையாரியும் இருந்தனர். கிராமங்கள், குடி, ஊர், மங்கலம், கிராமம், குறிச்சி என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன. நியாயம் வழங்குவதில் அந்தந்த கிராமங்களின் கிராமத்தார் பஞ்சாயத்தும் உதவி புரிந்தது, தமக்கு முந்திய சோழர்கள் காலத்து கிராம நிர்வாக முறையில் நாயக்கர்கள் ஒரு மாறுதலையும் செய்யவில்லையென்றே கூறிவிடலாம். ஜான் நியூஹாவ் என்ற வெளிநாட்டவர் ஒவ்வொரு கிராமத்திலும் இரு நியாயாதிபதிகள் இருந்தனர் என்று குறிப்பிடுகிறார்.

கிராமங்களில், நியாயம் வழங்கப்படுவதில் மத்தியஸ்த முறை பெரிதும் கையாளப்பட்டது. சொத்து உரிமை சம்பந்தமான விவகாரங்கள்கூட மத்தியஸ்தத்தால் தீர்க்கப்பட்டு வந்தன.

பொது விவகாரங்களிலும் மத சம்பந்தமான தகராறுகளிலும் மந்திரிகள், பிரதானி இவர்களுடைய உதவியுடன் நாயக்கரே நீதி வழங்கினர். அவரில்லாத காலங்களில் பிரதானியே அந்தப் பதவியில் அமர்ந்து நீதி வழங்கினர். எல்லா விவகாரங்களிலும் மறுதீர்ப்பு வழங்கும் அதிகாரம் நாடாள்பவரிடமே இருந்தது. நியாய மன்றத்துக்குத் தர்மசாலை என்றே பெயர் வழங்கிற்று. நீதிமன்றம் பகிரங்கமாக நடைபெறும். சாதாரணமாகத் தண்டனை விதிப்பு, அபராதமாகவும்

தண்டமாகவும் இருக்கும். பெரிய குற்றங்களை விசாரிக்கையில், குற்றவாளிக்குச் சிறைத்தண்டனை விதிப்பது வழக்கம். அவ்வாறு தண்டனை பெற்று வல்லம் கோட்டையில் சிறையில் வைக்கப்பட்டவர்களைப்பற்றி பாதிரியார்களின் குறிப்புகள் கூறுகின்றன.

தஞ்சை இராஜதானியின் கடலோரப் பகுதி அந்நிய நாட்டவரான போர்த்துகீசியர், டச்சுக்காரரர், டேனிஷ்காரரர்கள் கையிலிருந்தது. அவர்களுடைய பொருளாதார, நீதி நிர்வாகங்களில் நாயக்கர்கள் தலையிட எண்ணியதே இல்லை. அவர்களிடமிருந்து தமக்கு வரிப்பணம் ஒழுங்காக வசூலாகிறதா என்பதொன்றையே அவர்கள் கவனித்தனர். மேலும் டச்சுக்காரர்களுக்கு அளிக்கப்பட்ட கவுல் ஒப்பந்தத்தில் அவர்களுடைய நிர்வாகத்திலிருந்து தப்பியோடிய அயல்நாட்டவரை அவர்களிடமே ஒப்படைத்து விடவேண்டுமென்ற நிபந்தனையும் இருந்திருக்கிறது.

அரசாங்கத்தின் வருமானத்துக்கு முக்கிய ஆதாரம் நில வரி. நாயக்கர்கள் நில வருமானத்தில் ஒரு பாதியை வரியாக எடுத்துக்கொண்டனர் என்று பாதிரிகளின் குறிப்புக்கள் கூறும். பொதுவாக, வரிகள் பணமாகவே செலுத்தப்பெற்றன. விஜயராகவர் டச்சுக்காரர்களுக்கு அளித்த ஒப்பந்தம் ஒன்றிலிருந்து, தஞ்சையில் நாணயச்சாலை ஒன்றும் இருந்ததாகத் தெரிகிறது பின்னர் மகாராஷ்டிர ஏகோஜியும் பணமாகவே வரி வசூலித்தாரென்று 1683-ம் வருடத்தில் பாதிரியார்களின் கடிதம் ஒன்று கூறுகிறது, ஆனால் போதிய அளவு ஆதாரங்கள் இல்லை. நில வரிக்கு அடுத்தபடியான வருமானம் அந்நியர்கள் செலுத்திய வாடகைப்

பணமே ஆகும். கல்வெட்டுகளிலிருந்து பல சின்னஞ் சிறு வரிகள் வசூலிக்கப்பட்டன என்று வெளிப்படுகிறது. சிலவற்றின் வருமானம் ஸ்தாபனங் களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் விடப்பட்டிருந் தது; கோயில்களுக்கும் மற்ற தருமங்களுக்கும், நன் கொடையாகவும், நபர்களுக்கு அவர்களுடைய சேவைக்குப் பரிசாகவும் அளிக்கப்பட்டது. கோயில் களுக்கும் தருமத்துக்கும் நிலங்கள் வரி விலக்குடன் விடப்பட்டிருந்தன. அதிகாரிகள் வரிகளை வசூலித்துக் கஜானுவில் செலுத்திவந்தனர்.

அரசாங்கத்தின் செலவு வகைகளில் முதலாவது சாம்ராஜ்ய மன்னருக்குச் செலுத்தப்படவேண்டிய கப்பம். தஞ்சை நாயக்கர்கள் எவ்வளவு கப்பம் கட்டி னர் என்பது தெரியவில்லை. ஆனுல் வீகோ என்னும் பாதிரியார் கடிதம் ஒன்றில் 60 லக்ஷத்திலிருந்து ஒரு கோடி 'பிராங்க்' வரை தஞ்சை கப்பங் கட்டியதாகக் கூறுகிருர். இந்த லெட்டர் 1611-ம் வருஷத்தியது. கப்பத்துக்குப் பிறகு, ராணுவச்செலவும், பொது நலத் திட்டங்களும், தருமங்களும் முக்கிய செலவுகளாகும். தஞ்சை ராஜதானியில் ராணுவ மானிய முறையான பாளையக்காரர் அமைப்பு நடைபெருமல், ராணுவச் செலவு முழுமையும் அரசாங்கத்தையே சார்ந்தது. அரசாங்கம் மக்களுடைய மதத்தைப் பரிபாலிக்கவும் கடமைப்பட்டிருந்ததால், கோயில்களைக் கட்டுவதற் கும் புதிப்பிப்பதற்கும் ஏராளமாகப் பணம் செலவிட லாயிற்று. அன்னதானம் ஏராளமாக நடைபெற்றது குளங்கள், வாய்க்கால்கள், பல இடங்களில் படித் துறைகள் முதலியன கட்டவும் பணம் செலவிடப்

பட்டது. சோழர்கள் காலத்திலேயே நீர்ப்பாசனத் திட்டம் நன்கு வகுக்கப்பட்டிருப்பினும், நாயக்கர்கள் பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வதில் மேலும் நிரம்பச் செலவிட்டனர். அச்சுதப்பர் காவிரியில் அணை கட்டியதைக் கல்வெட்டுகளும் அக்காலத்திய நூல்களும் கூறுகின்றன. பருவ மழை பொய்த்து விடுமோ என்ற பயத்தினால் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்குப் பல குளங்கள் வெட்டப்பட்டன.

வெளிநாட்டு வர்த்தகம் அந்நிய நாட்டவர்களிடமே இருந்தது. நாயக்கர்கள் தம் மக்களைக் கடல் வாணிபத்தில் இறங்கத் தூண்டியதாகத் தெரியவே இல்லை. அரசாங்கத்துக்கு ஏற்றுமதி இறக்குமதி வரிகளிலிருந்து நிறைய வருமானம் கிடைத்ததால், வெளி நாட்டு வியாபாரம் மும்முரமாக நடந்தது என்பது மட்டும் வெளிப்படை. ஆனால் அது அயல் நாட்டவர் களின் கையிலேயே இருந்தது.

உள்நாட்டு வியாபாரம் பெருவாரியாக சுதேச வணிகர்களிடமே இருந்தது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஏராளமான பொருள்கள் அனுப்பப்பட்டு வந்தன. வியாபாரிகள், கள்ளர்களுக்குப் பயந்து, கூட்டம் கூட்டமாகவே பிரயாணம் செய்தனர்.

சோழ மண்டலக் கரையில் போர்த்துகீசியரும், டேனிஷ்காரரும் இருந்து வியாபாரம் நடத்தினரென்று ஆங்கில வர்த்தகக் குறிப்புகள் கூறும். நாகப்பட்டினமே கடல் வாணிபத்துக்கு நடுத்தலமாக விளங்கிற்று. புலிகட் துணிகளைவிட சோழ மண்டலத்துத் துணியே மேலானது, நயமானது, அழகுள்ளது, மலிவானது என்று அந்நியர்களின் வரலாறு கூறுகிறது. அரிசியும்

ஏற்றுமதியாயிற்று; அத்துடன் மிளகு, சீட்டித்துணி, முரட்டு நூல், நயம் பருத்தி நூலாடைகள், அவுரி முதலியன ஏற்றுமதியாயின, மலாக்காவிலிருந்தும் சீனத்திலிருந்தும் வங்கத்திலிருந்தும் எல்லா வாசனைச் சரக்குகளும் மருந்துச் சரக்குகளும் இங்கு இறங்கின. முக்கியமாகக் கண்ணாடிச் சாமானும், அகலமான துணியும், கம்பளி ஆடைகளும், தாமிரம், பாதரசம் வெடியுப்பு, சாதிலிங்கம் முதலியனவும் இறக்குமதி யாயின. ஆப்பிரிக்காவிலிருந்து யானைத் தந்தமும், மத்தியதரைப் பிரதேசங்களிலிருந்து முத்தும் பவள மும், தங்கம் வெள்ளிச் சரிகைகளும், பட்டாக் கத்திகளும். சிறு கத்திகளும் இறக்குமதியாயின. அந்நிய நாட்டினர் நல்ல லாபம் அடைந்தனர். உள் நாட்டில் செட்டியார்களே வியாபாரம் நடத்தி னர். அவர்கள் நுட்ப புத்தியுள்ளவர். மூர் ஜாதியின ரிடமிருந்து குதிரைகளையும் போர்த்துகீசியரிடமிருந்து இலங்கை யானைகளையும் நாயக்கர்கள் மிகுந்த விலை கொடுத்து வாங்கினரென்று குறிப்பிட்டிருக்கிறது.

இருப்பினும், உழவுத் தொழிலே நாட்டின் தலை மையான தொழிலாக இருந்தது. அரசாங்கத்தின் முழு ஆதரவு பெற்று உழவுத் தொழில் நல்ல அபி விருத்தியுற்றது. நீர்ப்பாசனங்கள் நன்கு பராமரிக்கப் பட்டு வந்தன. அரிசியுடன் கரும்பும் பயிராயிற்று; வெல்லம், சர்க்கரை இரண்டும் உற்பத்தி செய்யப் பட்டன; ஆனல் இவை சிறிதளவேதான். பழக் கொல்லைகளும் தோட்டங்களும் செழித்து விளங்கின. பழங்களின் மேன்மையைப் போர்த்துகீசியர் குறிப்பிடு கின்றனர். பருத்திநூல் நெசவும் துணிகளுக்குச் சாயம்

ஏற்றுவதும் மிக அபிவிருத்தியடைந்திருந்தன. கடலோரப் பகுதியிலும் உள்நாட்டிலுங்கூட மக்கள் உப்பு எடுத்தனர். தமக்குக் கிடைக்கும் வரி வருமானத்தைக் கருதி, நாயக்கர்கள் அனைத்தையும் ஆதரித்து வந்தனர். சுருக்கமாக, மக்களுடைய உபயோகத்துக்கு அவசியமான பொருள்கள் அனைத்தும் உள்நாட்டிலேயே உற்பத்தியாயின எனலாம். பட்டுத் துணி, கம்பளித் துணி, கண்ணாடி போன்ற நாகரிகச் சாமான்களே இறக்குமதியாயின.

நாயக்கர்கள் ஹிந்துக்களின் தார்மிக நோக்குடனேயே பல மதத்தினரையும் துவேஷமின்றி ஆதரித்தனர். சேவப்ப நாயக்கருடைய போக்கையே மற்றவர்களும் தொடர்ந்து கையாண்டனர். நாயக்கர்கள் பக்தியில் சிறந்தவர்கள்; வைணவர்கள்; சிறந்த ஒழுக்கமுள்ளவர்கள். உடன்கட்டையேறும் வழக்கமும், முகமூடியணியும் வழக்கமும் ராஜஸ்திரீகளிடைமட்டுமே வழக்கத்திலிருந்தது. இதற்கு அந்நியர்களின் குறிப்புகள் சான்றுகூறும். அரசனது அவையில் பொது மகளிரும் இருந்தனரென்று அக்காலத்து நூல்களிலிருந்து வெளியாகிறது; பலர் புலவிகளாகவும் திகழ்ந்தனர்.

தஞ்சை நாயக்கர் கல்வியையும் கல்விமான்களையும் மிகவும் ஆதரித்தனர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் 54 கவிகள் இருந்தனரென்றும் அவர்களை அரசாங்கம் போஷித்துவந்ததென்றும் கூறப்படுகிறது. பொது மக்களின் கல்வி அபிவிருத்திக்கென்று ஒரு திட்டமும் அக் காலத்தில் இல்லை. கல்வித் துறை பெரும்பாலும் தனிப்பட்டவர்கள் கையிலேயே இருந்தது. பல அக்கிரகாரங்களும் கல்விக்கு இருப்பிடமாய் விளங்கின.

இன்றும் தஞ்சைப் பிரதேசம் முழுவதிலும் காணப் படும் பாடசாலைகள், நாயக்கர்கள் கல்வித் துறையில் கொண்டிருந்த சிரத்தைக்கு அறிகுறியாகும். ஆனல் அவற்றில் மற்ற சமூகத்தினருக்கு இடம் அளிக்கப் படவில்லை. கோயில்களும் மடங்களும் கல்வி வளர்ச் சிக்கு இருப்பிடமாயிருந்தன. அவற்றிற்கு நாயக்கர்கள் நிலங்களை மானியமாக விட்டு ஆதரித்தனர். அரச அவையிலேயே அடிக்கடி வித்வான்களின் போட்டி நடைபெறுவதுண்டு. இவற்றில் பங்குகொள்ளப் பல இடங்களிலிருந்தும் வித்வான்கள் வந்தனர். திறமைக் குத் தக்கவாறு அவரவர்க்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

நாயக்கர்கள் தாமும் கல்விமான்களாகவே இருந் திருக்கின்றனர். குறிப்பாக, நாடகத்துறை மேம்பாடு அடைந்தது. யக்ஷகான நாடகங்கள் என்ற நாடகமுறை தோன்றிச் சிறந்தோங்கியது. நாடக அரங்குகளும், பொம்மலாட்டமும் வளர்ச்சியுற்றன. நடனக் கலையில் மிக மிகத் தேர்ச்சி பெற்ற மகளிர் இருந்தனரென்று இராமபத்திராம்பா எனும் ஆசிரியை கூறுகிறுர். இரகு நாத நாயக்கரே நேரில் தமது அரண்மனையில் நடனக் கச்சேரிகளை பார்வையிடுவதுண்டு என்றும், வீணையும் மிருதங்கமும் வாசிக்கக்கூடிய தேர்ச்சிபெற்ற மகளிர் இருந்தனர் என்றும், அவற்றைப் பின்னணியாகக் கொண்டு நடனங்கள் நடைபெறுவதுண்டு என்றும் தெரிகிறது. சித்திரமும் சிற்பமும் சங்கீதமும் உச்ச நிலையை எட்டின. அரண்மனை உட்புறச் சுவர்களில், பட்டமளிப்பு விழாக்களும் பல சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளும் சித்திரிக்கப்பட்டிருந்தன என்று விஜய

ராகவர் தமது இரகுநாத அப்யுதயத்தில் குறிப்பிடுகிருர். சங்கீதத் துறையில் இரகுநாதர் தாமே புதிய இராகங்களையும் தாளங்களையும் இயற்றினர். வேங்கடமகி கர்னுடக சங்கீதத்திற்குப் புத்துயிர் ஊட்டினர்.

இதைக் குறிப்பிடுகையில் நாம் அக் காலத்திய சம்பிரதாயங்களை மனத்திற் கொண்டே அந்தப் பிரச்னையை நோக்கவேண்டுவது அவசியம். தஞ்சை நாயக்கர்கள் அரசியல் துறையில் புதிதாக ஒன்றும் செய்து விடவில்லை எனினும், கல்வித் துறையிலும் கலைத் துறையிலும் அவர்கள் சிறந்த சேவை செய்துள்ளனர். அதன் அடிச்சுவடுகள் இன்றும் அழியாது நிற்கின்றன; தாங்கள் தெலுங்கர்களாயினும், நாட்டுடன் ஒன்றி, மக்களுடைய நலனுக்கு வேண்டுவன செய்தனர். அவர்கள் கலைததுறைக்கு ஆற்றிய தொண்டை அடிப்படியாகக் கொண்டே, பின்னர் வந்த மகாராஷ்டிரர் ஆட்சியில் தஞ்சையில் அரசரது அரண்மனைப் புத்தகாலயம் தோன்றிற்று. மதம், கல்வி, கலை இவற்றை நாயக்கர்கள் போஷித்து வந்ததைக் கவனித்தால், கலாசாரத் துறையில் அவர்கள் ஆட்சி தென்னிந்திய சரித்திரத்தில் முக்கிய இடம் பெறும் என்பதில் ஐயமில்லை.

———

அநுபந்தம்

கலை, இலக்கியத் துறைகளில் அபிவிருத்தி

இரகுநாதர் காலம்:

இரகுநாத நாயக்கர் தாமே, பாரிஜாத அபஹரணம், வால்மீகி சரிதம், அச்சுதேந்திர அப்யுதயம், கஜேந்திர மோக்ஷம், நள சரிதம், ருக்மணி கிருஷ்ண விவாகம், இராமாயணம் முதலிய காவியங்களையும் எண்ணற்ற யக்ஷகானங்களையும் இயற்றினார். சங்கீத சுதா எனும் இசை நூலை இயற்றினார். தாமே ஜயந்த சேன, ஜயமங்கள, சிம்ஹலதா, என்ற புது இராகங்களையும் ரதி லீலா, துரங்க லீலா, ரங்காபரண, அனங்க பரிக்ரமண, நந்த லீலா, அபிநந்தன, நந்தநந்தன, அபிமாலந, ராமாநந்த என்ற தாளங்களையும் தோற்றுவித்தார் எனச் 'சங்கீத சுதா' கூறும்.

சங்கீத சுதாவை கோவிந்த தீட்சிதர் இயற்றினரென்பதைவிட அவரும் நாயக்கருமாகச் சேர்ந்து இயற்றினரென்று கருத இடமுண்டு. கோவிந்த தீட்சிதர் சாகித்ய சுதா என்ற கிரந்தத்தை இயற்றினார்.

கோவிந்த திட்சிதரின் சிறந்த இரு குமாரர்களான யஞ்யநாராயண தீட்சிதரும் வேங்கடமகியும் சங்கீதத்தில் நிபுணர்கள். தம் தந்தையாரைப்போலவே இருவரும் வடமொழிப் புலமை நிரம்பியவர்கள்; இருவரும் யாக யஞ்யங்களைச் செய்தவர்கள். யஞ்ய நாராயண தீட்சிதர் ஆரம்பத்தில் தம் தந்தையிடமும், பின்னர் இரகுநாத நாயக்கரிடமும் கல்வி பயின்றார். அவருக்கு, தர்க்கம், வியாகரணம், மீமாம்சை, வேதாந்தம் முதலியவற்றை இரகுநாதரே போதித்திருக்கிறார். இரகுநாதர் தம் குருவின் குமாரருககுத் தாமே குருவாக விளங்கினார்.

யக்ஞநாராயண தீட்சிதர் ஆஸ்தான வித்வான். அவர் சாகித்திய ரத்னாகரம், ரகுநாத விலாஸ நாடகம், அலங்கார ரத்னாகரம் என்ற வடமொழி நூல்களை இயற்றினார்.

வேங்கடமகி எல்லாத் துறைகளிலும் நிபுணர். அவர் வடமொழியில் சதுர்தண்டிப் பிரகாசிகை என்ற பிரபல இசை நூலை இயற்றினார். கர்னாடக சங்கீதத் துறையில் முன்னர் இருபத்திரண்டு ஸ்வரங்களாக இருந்ததைப் பன்னிரண்டாக அமைத்தவர் அவரே. அந்தப் பன்னிரண்டு ஸ்வரங்களுக்கு இயைந்தவாறு வீணை வாத்தியத்தையும் அவர் திருத்தியமைத்தார். இன்று கர்னாடக சங்கீதத் துறையில் தென்னாட்டில் வழங்கிவரும் மேளகர்த்தாவைத் தோற்றுவித்தவர் அவரே ஆவார்.

இதைத் தவிர, வேங்கடமகி வார்த்திகாபரணம் எனும் மீமாம்சை நூலையும், கர்மாந்த வார்த்திகம், போதாயன சூத்திரங்களின் விரிவுரை, சுலப மீமாம்ஸா, வேதகால க்ஷேத்திர கணிதம் (திரிகோணமிதி), சங்கீத சாம்ராஜ்யம் எனும் வடமொழி நூல்களையும் இயற்றியுள்ளார். ருக்மணி பரிணயம் இயற்றிய ராஜசூடாமணி தீட்சிதரும் மதுரை நாயக்கர்களிடம் மந்திரியாக விளங்கிய நீலகண்ட தீட்சிதரும் வேங்கடமகியின் சிஷ்யர்கள் ஆவர்.

சிவ ஸஹஸ்ர நாம பாஷ்யம், வேதாந்த தர்க்க நிர்ணயம் என்ற நூல்களை இயற்றிய லிங்கத்வாரி என்பவர் கோவிந்த தீட்சிதருடைய மற்றொரு குமாரர் என்று சொல்லப்படுகிறது.

ராஜசூடாமணி தீட்சிதர், தந்திர சிகாமணி எனும் பிரயோக விளக்க நூலை இயற்றினார். ருக்மணி பரிணயம் என்ற சாகித்யத்தையும், ஜைமினி சூத்திரங்கள் பற்றிய விரிவுரை ஒன்றையும் அவர் எழுதியுள்ளார்.

சிவ பக்தியில் சிறந்தவரும் அத்வைத சாஸ்திர மேதையுமான அப்பைய தீட்சிதர், கோவிந்த தீட்சதர் காலத்தவரே. கோவிந்த தீட்சிதர் மூத்தவர் என்று தெரிகிறது, அப்பைய தீட்சிதர் வடமொழியில் 104 நூல்களை எழுதியுள்ளார் என்று கூறப்படுகிறது. அவருக்குத் தெரியாத இலக்கியத் துறையே இல்லை. அவர் சிவாத்வைதத்தை நிலை நாட்டினார். விஜயநகர மன்னராலும் தஞ்சை நாயக்கராலும் அவர் பாராட்டப்பெற்றவர், மன்னருடைய

வேண்டுகோளுக் கிணங்கி அவர் குவலயானந்த என்ற நூலை இயற்றினூர். பிரபலரான நீலகண்ட தீட்சிதரும் நாயக்கர் காலத்தவரே.

சேமகூரி வேங்கட கவி தெலுங்கில், விஜய விலாசமு, சாரங்கதர சரித்திரம் என்ற காவியங்களை இயற்றினூர். சதலே கினி என்ற விருதுபெற்ற ரெங்கஜம்மா மன்னுருதாஸ நாடகம் உஷாபரிணபம் இரண்டையும் இயற்றினூர். இராமபத் திராம்பா, ரகுநாத அப்யுதயம் என்ற பிரபல காவியத்தை இயற்றினாள். இதிலிருந்து இரகுநாதர் காலத்திய நிகழ்ச்சி கள் பல தெரிகின்றன.

விஜயராகவ நாயக்கர் காலம்:

விஜயராகவரே இருநாத அப்யுதய நாடகம், ராஜகோபால ஸ்வாமி பிரபந்தம் என்பவற்றை இயற்றினூர். காளாகவி விஜயராகவ வம்சாவளி, ராஜகோபால விலாசமு என்ற காவியங் களை இயற்றினூர். வேங்கடபதி சோமயாஜி, விஜயராகவ கீர்த்தி சந்திர விஹாரமு என்ற காவியத்தை இயற்றினூர்.

விஜயராகவ நாயக்கர் காலத்தின் தொடக்கத்தில் சிறிது காலமே வேங்கடமகி அவருடைய மந்திரியாக இருந்தார். அக்காலத்தில்தான் அவர் தமது பிரசித்தி பெற்ற "சதர்தண்டிப் பிரகாசிகை" யை இயற்றினூர். பெரும்பாலும் தெலுங்கு இலக்கியமும், குறிப்பாக நாடகங்களுமே விஜயராகவர் காலத்தில் ஓங்கிநின்றன.

யக்ஷகானங்கள்:

தெலுங்கு இலக்கியங்களுக்கு ஆதரவு அளிப்பதில், தஞ்சை நாயக்கர்கள் தங்கள் எஜமானர்களான விஜய நகர மன்னர்களுடன் போட்டியிட்டனர் என்றே கூற லாம். அரசனது அவை, புலவர்களும் கல்விமான்களும் மொய்க்கும் தேனடையாக விளங்கிற்று. நாடகத் துறை யில் அவர்கள் தனித்த அக்கரை கொண்டனர். எண்ணி றந்த யக்ஷகானங்கள், குறவஞ்சிகள், ஜக்கினிகள் முதலி யன நாயக்கர்களாலும் மற்ற புலவர்களாலும் இயற்றப் பட்டன. இவை மூன்றும் சமஸ்கிருத நாடகங்களின் போக்கில் எழுதப் பெருவிடினும், நாடகத்துக்கு உறுப்பு

களான நாடக பாத்திரங்கள், பேச்சு, கள அமைப்பு எல்லாம் அமைந்திருந்தன. நாயக்கர்கள் காலத்து இலக்கிய முன்னேற்றத்தில் முக்கியமான அம்சம் யக்ஷகானங்களே ஆகும். பொது மக்களுக்கெனவே அவைகள் வகுக்கப்பட்டன; எனவே அவைகளில் எளிய நடையில் அமைந்த பாட்டுக்களும் ஹாஸ்யக் காட்சிகளும் இடம் பெற்றன. இரகுநாத நாயக்கரே இருநூறுக்கு அதிகமான யக்ஷகானங்களை இயற்றியுள்ளார் எனத் தெரிகிறது.

தெற்கத்திய தெலுங்கு இலக்கியத்தில் ஜனநாயக உணர்ச்சியே ஊடுருவி நின்றது. ஆண்கள், பெண்கள், பிராம்மணர், மற்றையோர், பணக்காரர்கள், ஏழைகள், எஜமானன், சேவகன் அனைவரும் ஒன்றித் தொண்டாற்றி, தெலுங்கு இலக்கியத்தை வளர்த்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்திரக் கலை:

தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில், விமானத்தின் நேர் கீழே, கர்ப்பக்கிருகத்தைச் சுற்றியுள்ள இருண்ட பிரகாரத்தில் உள்ள பதினைந்து அறைகளில் மூன்று நீங்கலாக மற்றவற்றின் சுவர்களில், மிருதுவான சாந்துப்பூச்சின் மேல் வர்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இவை நாயக்கர்கள் காலத்தனவாக இருக்கக்கூடும். நான்கு அறைகளில் அந்தச் சாந்துப்பூச்சைப் பெயர்த்துப் பார்த்த ஆராய்ச்சிக்காரர்கள், அதனடியில் சோழ மன்னர் காலத்துச் சித்திரங்கள் இருக்கக் கண்டனர். அது நிற்க, நாயக்கர்கள் காலத்தியதென அவர்கள் கருதும் சித்திரங்களில் தஞ்சை ஸ்தல புராணத்தை யொட்டிய கதைகளும், மற்ற புராணக் கதைகளும் தவிர, லிங்க பூஜை, சிவனை மானிட உருவில் பூஜித்தல், பக்த கோஷ்டிகள், முனிபுங்கவர்கள், வீரர்கள், மன்னர்கள் முதலியோரின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. அவற்றின் அடியில் தெலுங்கில் கதை விவரமும் எழுதப்பட்டுள்ளது. இந்தச் சித்திரங்கள் சோழர் காலத்தவற்றைப் போல அவ்வளவு மேன்மையுள்ளனவாக இராவிடினும், நாயக்கர்கள் ஆட்சிக்காலத்து உடை, அணிகலன்கள்

முதலியவற்றைக் காண நமக்குச் சந்தர்ப்பம் அளிக்கின்றன. மேலும் சித்திரக் கலை தஞ்சையில் ஒடுங்கிக் கொண்டே வருவதையும் எடுத்துக் காட்டுகின்றன.

மெல்லிய கோடுகளால் ரம்மியமான உருவங்களை மாட்சியுறத் தீட்டுவது சோழர்காலத்திய முறை. அதையே நாயக்கர்களும் கையாண்டனர் என்றாலும், சோழர் காலத்துக் கைவீச்சும் ரம்மியமான வளைவு கோடுகளும் காண்பதற்கில்லை, மேலும் ஈரச்சாந்தின்மேல் சித்திரிக்கும் சோழர் கால முறை ஓரளவு மாறி, உலர்ந்த சாந்தின்மேல் எழுதும் சித்திர முறையை நாயக்கர்கள் காலத்தில் காண்கிறோம். எனவே நாயக்கர்கள் காலத்தில் சுவர்ச் சித்திரங்களின் திறமை குன்றத் தொடங்கியது என்றே நினைக்க வேண்டி வருகிறது. உலர்ந்த சாந்துக்கு இயைந்தாற்போல கறுப்புக் கோட்டினால் உருவம் வரைந்து, இடையே வர்ணம் தீட்டும் முறை கையாளப்பட்டிருக்கிறது. இந்தச் சித்திரங்கள் விஜயராகவர் காலத்தவை.

தமிழ் மொழி:

விஜயநகரமன்னர்கள் கன்னடியர்களாக இருப்பினும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்திருக்கின்றனர். பெரும்பாலும் தத்துவ நூல்களும், சித்தாந்த விளக்கங்களும் ஸ்தல புராணங்களுமே தமிழில் தோன்றியிருக்கின்றன. ஆனால் தஞ்சைப் பிரதேசத்தை ஆண்ட நாயக்கர்கள் நேரடியாகத் தமிழை ஆதரிக்கவில்லை என்பது தெளிவு. திருவையாற்றுத் தலபுராணம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட தொன்றே குறிப்பிடத் தகுந்த தொண்டு.

அந்நிய மதத்தவரும் அந்நிய நாட்டவருமான வியாபாரிகள் நாயக்கர்களை அணுகிப் பல சலுகைகள் பெற்றிருக்கையில் நாட்டவர்களான தமிழ் மக்கள் அவர்களை அணுகக்கூடவில்லை என்று வாதிப்பதற்கு இடமில்லை. அது எவ்வாறிருப்பினும், கர்நாடக சங்கீதம் அடிப்படையான மாறுதல்களை யடைந்து அமைப்புற்ற நாயக்கர்கள் ஆட்சியில் தமிழறிஞர்களும் ஒதுங்கிநின்று இசைத்துறைக்குப் பணியாற்ற இடம் ஏற்படாதது வருந்தத்தக்கது.